ஜநவிநோதிநி.

இல. 9, 10.] { செப்டெம்பர்மீ அக்டோபர்மீ } 1883. [புஸ்த. XIV.

ஆஸ்திரேலியா கண்டம்.

ஆரியபாஷையில் பூமிக்கு வசுமதி என்றும் வசுதை என்றும் பெயர்கள் வழங்குகின்றன. அவற்றின் பொருளாவது திரவியங்களை வயிற்றில் அடக்கிக்கொண்டிருப்பது என்பதாம். அதன்படியே இப்பூமியின் உட்புறத்தில் அளவற்ற செல்வம் இருக்கின்றதெனத் தெரிந்து பலநூற்றுண்டுகளாகப் பலவிடங்களில் பொன்வெள்ளிக் கனிகளும் நவரத்தினக் கனிகளும் விசேஷமாய்க் கண்டெடுக்கப் பட்டுவருகின்றன. அத்தன்மையான பூபாகங்கள் பலவற்றுள்ளும் ஆஸ்திரேலியா கண்டமானது பொன் ஒன்றுக்காகவே விசேஷமாய்ப் பெருமைபெற்றுப் பொன்விளையும் பூமியென யாவராலும் விசேஷமாய்க் கொண்டாடப்பட்டுவருகின்றது; ஆயினும் இப்படி விசேஷமான சம்பத்தும் விநோதமும் அமைந்த கண்டமொன்று இப்பூமண்டலத்தில் இருக்கின்றதென்பதுகூட ஏறக்குறைய 300 வருஷங்களுக்குமுன் ஒருவர்க்கும் தெரியாது. பூகோளவிசாரம் செய்பவர்களும் கப்பற்காரர்களும்மாத்திரம் தென்கிழக்கில் நெடுந் தூரத்துக்கப்பால் ஒரு கண்டம் இருக்கவேண்டுமென்று உத்தேசமாய் ஊகித்துக்கொண்டிருந்தனர்; என்றாலும் அதைக் கண்டறியவேண்டுமென ஒருவரும் பிரயத்தனப்படவில்லை. அப்படியிருக்கப் பதினாறுவது நூற்றாண்டின் துவக்கத்தில் போர்த்துக்கல்தேசத்துக் கப்பற்காரர்கள் அதைக் கண்டுபிடிக்க, பிறகு உலாந்தாக்காரர் முதலியோர் அவ்விடத்துக்குச் செல்லலானார்கள்.

அந்தக் கண்டம் முழுமையும் எதிரி எவருமில்லாமல் ஏகசக்கராமாய் ஆளும்படியான அதிர்ஷ்டம் அங்கிலேயர்க்கே அமைந்திருந்ததாயினும், 1688-ஆ வரையில் அவர்கள் அந்தக் கண்டத்தை எட்டிப்பார்க்கவேயில்லை. அதன்பிறகுதான் டாம்பியர், கூக் முதலிய பிரசித்தர்களான பல கப்பல்யாத்திரைக்காரர்கள் அந்தத் தேசங்களைப் போய்ப் பார்த்து முழுமையும் அங்கிலேயர்க்கு அதீன

மாக்கிக்கொண்டனர். அந்தக் கண்டத்தைக் கண்டுபிடிக்கப் போனவர்களுடைய பெயர்களையெல்லாம் எழுதப்புகுந்தால் அதுவே ஒரு பக்கத்திற்கு மேலாகும்; அவர்கள் அங்கே செய்த செய்கைகளைப்பற்றி எழுதப்புகுந்தால் ஒரு பெரிய புத்தகமாகும்.

அந்த ஆஸ்திரேலியாவானது கிழக்கு மகாசமுத்திரத்திலிருக்கின்றது. அது சமுத்திரமத்தியிலுள்ள ஒரு தீவாயினும், ஆசியா முதலியவற்றோடு கூட்டி அதையும் ஒரு ஐந்தாவது கண்டமென்றே பூகோளசாஸ்திரிகள் வழங்குகின்றனர். 2500 மைல் நீளமும் 2000 மைல் அகலமும், 8000 மைல் சுற்றளவும் 30 லட்சம் சதுர மைல் பரப்பும் உடையதாய்க் கிட்டத்தட்ட ஐரோப்பா கண்டத்துக்குச் சமமாயிருக்கின்ற பூமியைக் கண்டமென்று சொல்லாமல் மற்றென்னென்று சொல்லலாம்.

அவ்வாஸ்திரேலியா கண்டத்திலே மேலண்டைக் கரையோரமாயிருக்கின்ற நாட்டிற்கு மேற்கு ஆஸ்திரேலியா என்று பெயர். இச் சஞ்சிகைப்படத்தில் குறித்துக் காட்டிய காட்சியையுடைய ஹம்ஸ நதியானது அந்நாட்டிலேதான் இருக்கின்றது. அந்த நதியைநோக்கி அந்நாட்டிற்கு ஹம்ஸநதி நாடு எனவும் பெயர்வழங்குகின்றது. ஆஸ்திரேலியா கண்டத்தைப் போய்க் கண்டுபிடித்தவர்கள் முதலில் அந்நாட்டிலேதான் அடிவைத்து இறங்கினார்கள். ஆஸ்திரேலியா கண்டத்துப் பல நாடுகளுள்ளும் இது விஸ்தீரணத்தில் மிகப் பெரியதாயினும், பெருமைகளிலும் விளைவுகளிலும் மிகச் சிறியதாகவே இருக்கின்றது.

மேலும் அந்த நாடு வெகுவாய்ப் புல் பூண்டு முதலிய விருக்ஷவகைகள் சிறிதும் முளைக்காத மணல்வெளியானது; அதனால் அந்நாட்டார் தரித்திரராகவே இருக்கின்றனர். அந்தக் கண்டத்தார் அனைவர்க்குமே தரித்திரமென்பது இயற்கையாய் இருந்ததென்றாலும், மற்ற இடங்களிலுள்ளவர்கள் அந்தத் தரித்திரத்தை மெல்ல மெல்லப் போக்கியிருக்கிறார்கள். ஆதிமுதல் மேற்கு ஆஸ்திரேலியா குற்றவாளிகளைக் கப்பலேற்றி அனுப்புகிற தேசமாகவேயிருந்தது. இப்போது குற்றவாளிகளை வெகுவாய் அவ்விடத்திற்கு அனுப்புவதில்லையாயினும், அத்தேசத்தில் இருப்பவர்களெல்லாம் ஒருகால் சிறைச்சாலையிலிருந்தவர்களேயாம்.

மேற்கு ஆஸ்திரேலியாவிலும் அங்கங்கே திட்டுத்திட்டாய்ச் சில செழிப்பான பூமிகள் இருக்கின்றனவென்றாலும் ஒன்றுக்கொன்று இடையே விஸ்தாரமான மணல்வெளியாயிருப்பதால், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்லுவது நெடுந்தூரயாத்திரை செய்வதுபோலாகும்; அதனால் ஓரிடத்தில் விளைகின்ற விளைவுகளை மற்றோரிடத்திற்குக் கொண்டுபோய் மாற்றுவது மிகவும் கடினமாயிருக்கின்றது. மற்ற நாடுகளுக்குப் போக இன்னும் நெடுந்தூரமா

யிருப்பதால் அவ்விடங்களில் சென்று வர்த்தகவியாபாரங்கள் செய்வதென்கிற பேச்சுக்கே அவகாசமில்லை; அதனால் அத்தேசம் இன்னும் ஈனமான ஸ்திதியிலேயே இருக்கின்றது.

இப்போது அவ்விடத்தில் பொன்னும் விசேஷமாய் அகப்படுவதில்லை; சிறிதளவு அகப்பட்டாலும் அதனால் படுகிற பிரயாசத்தின் கூலிக்குக்கூட கட்டுவதில்லை. மேலும் அவ்விடங்களில் ஒருவித நச்சுக்காற்று வீசுவதால் ஆடுமாடுகளை வைத்துக் காப்பாற்றுவதும் கடினமாயிருக்கின்றது. அப்படியிருந்தாலும் தங்கள் தேசத்தில் இன்னும் விசேஷமாய்ப் பொன் கிடைக்கலாகுமெனவும், நாநாதேசங்களிலுமிருந்து குடிகளும் அநேகமாய் வந்தடையலாகுமெனவும் அத்தேசத்தவர் கோரியிருக்கிறார்கள். அங்கே இந்த ஹம்ஸநதியை அடுத்த இடங்கள் ஆரோக்கியமான பூமியாயிருக்கக்கண்டு அநேகர் அவ்விடங்களில் குடியேறியிருக்கின்றார்கள்.

நாம் பருகும் பால்.

மன்னுயிர்க்குப் பாலினும் சிறந்த உணவு வேறில்லை. பலவகைத்தாய பால்களுள் "பாலெல்லாம் நல்லாவின் பாலல்ல" என்று பெரியோர் உரைத்தவண்ணம் ஆவின்பாலே மேலானதாதலால் அதன் குணகுணங்களை ஆராய்ந்துபார்த்தலானது யாவரையும் பொறுத்த கடனேயாம்.

பாலானது மிருகத்தினின்று உண்டாகிற ஓர்வகை திரவப்பொருளாதலால், அது பற்பலவாகிய மாறுதலையடைந்து, முடிவில் ஊசிப்போகும் தன்மையது. ஆதலினால், பாலிலே நோயுண்டாக்கும் பரமாணுக்கள் சம்பந்தப்படுமாயின், அதன்மூலமாய் அந்நோய் அதைப் பருகுவோர் யாவர்க்கும் கண்டு எங்கும் பரவும். பாலானது திரவபதார்த்தமானதால், ஜலத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிற பொருள்களெல்லாம் எப்படியோ அதனோடு வெகு சூட்சுமமாய்ச் சேர்ந்துகொள்ளும். பால் நல்லதாயிருப்பதும் தீயதாயிருப்பதும், பசுவின் தன்மைக்கும், அது கட்டப்பட்டிருக்கும் இடத்தின் தன்மைக்கும் ஏற்றபடிதான் இருக்கும். நாம் இதுவிஷயத்தைப்பற்றி ஆராய்ந்துபார்த்தால் நமது நகரத்தார் அருந்தும் பாலின் குணகுணங்கள் அனைத்தும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கும்.

ஆதலினால், பாலுண்டாவதற்கு ஆதாரமான பசுவைப்பற்றி முதலில் ஆராய்தல்வேண்டும். இந்தியாவிலுள்ள பாற்பசுவுக்கும் இங்கிலாந்திலுள்ள பாற்பசுவுக்கும் இருக்கிற வித்தியாசத்தை எணிவைத்துப் பார்க்கவேண்டும். இங்கிலாந்திலுள்ள பசுக்களெல்லாம்

அதிகமாய்ப் பால்கறக்கும். அவ்விடத்துப் பசு எவ்வளவுதான் சொற்பமானாலும் நாளொன்றுக்கு ஒன்பதுபடி பாலுக்குக் குறையாது; நல்லமாடாகமட்டுமிருந்தால் தினப்படி இதற்கிருமடங்கும் பால்கறத்தல் ஆச்சரியமன்று. நமது தேசத்தார் இதைக் கேட்டால் வியப்படைந்துப் பொய்யென்றே நினைப்பார்கள். ஏனெனில், நமது தேசத்திலுள்ள முதல்தரமான பசுக்கள்கூட நாம் என்னபாடுபட்டாலும் ஒருநாளைக்கு நாலுபடிக்குமேல் கறக்கிறதில்லை; ஆனால், குளிர்ச்சியும் செழிப்புமுள்ள சிலவிடங்களில் மட்டும் இரண்டொருபடி இந்த அளவுக்கு அதிகமாக ஒருவேளை கறந்தாற் கறக்குமோ என்னவோ. வயிறு ஒட்டிக் கன்றுக்கே பாலில்லாமலிருக்கிற மாடுகள் எத்தனையில்லை? அதிலும் கோடைகாலம் பிறந்துவிட்டால் மாடுகளைக் கண்ணாலே பார்க்கக் கண்ணராவியாயிருக்கும். நமது தேசத்தார் பாலின் கூறுபாட்டைச் சிறிதேனும் அறியாமல், எப்படியாவது பசு நன்றாய்க் கறந்தாற் போதும் என்பதைமட்டுமே குறியாகக்கொண்டு, கண்டகண்டதையெல்லாம் உணவாகக் கொடுத்து அதன் வயிற்றை நிறைத்துவிடுகிறார்களேயன்றி நல்ல உணவைக் கொடுக்கிறதில்லை. எவ்வளவுக்கெவ்வளவு நாம் ஆவிற்கு நல்ல உணவிடுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அதன் மடிநிறையச் சுத்தமான பால்சுரந்து நன்றாய்க் கறக்கும்; ஆதலால் அந்தப் பாலைப் பருகுவோர்க்கு அப்பாலே மருந்துமாகும்.

நமது நகரத்திலுள்ளவர்கள் சாரமற்றதும் அழுக்குப்பிடித்ததுமான வைக்கோலையன்றி வேறாகாரம் போடுகிறதில்லை; ஒவ்வோர் வேளையில்மட்டும் சிறிது புல்லிட்டுவிட்டு, புளித்தசோற்றுத்தண்ணீர், ஊளைமோர், வாட்டுத்தவிடு, பருத்திக்கொட்டை, பிண்ணாக்கு, காராமணி இவற்றைப் பெருவிருந்து செய்வதுபோலிடுவார்கள். புளித்ததண்ணீரையும், நாற்றமோரையும் குடிக்குமானால், அவை பாலை எளிதில் கெடுத்து விரைவில் புளித்துப்போகச் செய்யும். ஆயினும் நமது நாட்டார், அவை அனைத்தும் அப்படியே நல்லபாலாகமாறி மாடு நன்றாய்க் கறக்கிறதென்றே நினைக்கிறார்கள். அன்றியும் நமது நகரங்களில் பசுக்களைக் கட்டிவைத்திருக்கும் கொட்டில்கள் மிகச் சிறியனவும் கேடுகெட்டனவுமாயிருக்கின்றமையால் மாடுகளுக்கு உண்டாகும் தீமை அதிகமேயாம். ஒருவன் நல்லகாற்றைச் சுவாசத்தின் வழியாய் உட்கொண்டு நோயின்றித் திடன்கொண்டு வாழ்ந்திருக்கவேண்டுமாயின், ஒருமணிநேரத்துக்கு மூவாயிரம் கனஅடி கொண்ட சுத்தமான காற்று வேண்டும்; இந்தக் கணக்கின்படி பார்த்தால் மாட்டுக்குத் தக்கபடி மாடொன்றுக்குப் பதினாயிரம்முதல் இருபதினாயிரம் கன அடிவரையில் காற்றுவேண்டும். ஜனங்கள் அடர்ந்த வீடுகளில் மாட்டுக்கு இத்தனைசுகம் பார்க்கக்கூடுமோ? யஜமானனே இடமில்லாமல்

அவதிப்படுகையில் மாட்டுக்குச் சுகங்கிடைப்பதெப்படி? இத்தனை அழுகில், நமது நகரங்களில் மாடுகட்டுமிடங்களெல்லாம் சாக்கடையோடு சம்பந்தப்பட்டிருக்கின்றமையால், மாடுகளுக்கு உண்டாகும் தீமையை யாரால் சொல்லத்திறம்? "உழக்கில் கிழக்கு மேற்கு" என்றவண்ணமாய், பெரிதான குடும்பங்களையுடைய ஏழைகள் புறுக்கூடுபோன்ற சிறியவீட்டில் குடியிருந்துகொண்டு, தங்கள் சுகத்திற்கென்றுதான் பார்ப்பார்களா, மாட்டின் சுகத்திற்கென்றுதான் பார்ப்பார்களா என்பதை நாமே கண்கூடாய் அறிந்துகொள்ளலாம். இப்படி நெருக்கமானவிடங்களில் மாடும் மனிதரும் கலந்து குடியிருக்கப்பார்ப்பதனால் நல்லகாற்றில்லாமல் இருவர்க்கும் பெருங்கேடு உண்டாவது திண்ணம். சிலவிடங்களில் வெகு நெருக்கமாய் ஒருவருக்கு எட்டுப்பேராகக் குடியிருப்பதுமல்லாமல், மாட்டையும் கட்டிவைத்துக்கொண்டிருக்கிறதைப் பார்க்கையிலேதானே நமக்கு நடுக்கமுண்டாகிறது. இதனாலுண்டாகும் கேட்டை அறிந்தும் அறியாதவர்கள்போலிருப்பது சிறிதேனும் நன்றன்று. இது தான்சாவ மருந்துண்பாரைப்போலாகிறதேயன்றி வேறென்ன? இங்கிலாந்தில் பசுக்களைக் கட்டியிருக்கும் இடங்களைப் போய்ப் பார்த்தால் நிர்மலமாய் வெகுரமணீயமாயிருக்கும். அவைகளுள் பெரும்பான்மையானவை குடங்குடமாய்க் கறக்கின்றமையால் அவற்றை (குண்டோத்னி) குடப்பாற்செல்விகளென்னலாம். நமது தேசத்துப் பசுக்களில் பெரும்பான்மையோவென்றால் நாழிப்பால் கறப்பதுகூட வருத்தத்தின்மேலாகவேண்டியிருக்கிறது. சில பசுக்கள் கன்றுக்குப் பால் தருவதே வருத்தமென்றால் வேறென்னசொல்லவேண்டும். இப்படிக்கெல்லாமிருக்க இந்துதேசத்துப் பசுக்களை இங்கிலாந்து தேசத்துப் பசுக்களோடு ஒப்பிட்டுப்பார்த்தென்னபயன்? சிலவீடுகளில் நாலைந்துமாடுகள் கறந்தும் குழந்தைப்பாலுக்கும் காணாமலிருப்பதுமுண்டல்லவா?

பசுக்களுக்குத் தீய உணவையிட்டு, சுத்தமான காற்றை உட்கொள்ளக்கூடாதபடி ஆபாஸமான சொற்ப இடங்களில் கட்டிவருவதினால் அதன் பால் பழுதுபடுகின்றது. இவ்வாறு கெட்ட பரமாணுக்கள் பாலினுட்சென்று அதைக் கெடுத்துவிடுவதை ரஸாயனசாஸ்திரத்தினால் திருப்திகரமாய் அறிந்துகொள்வது கடினமேயென்றாலும், கூடியமட்டில் அதினால் உண்டாகும் தோஷமட்டும் புத்திக்குப் புலப்படாமற்போகிறதில்லை. பாலுண்பதினால் நோயுண்டாயிற்றாயின், அப்பால் நோய்கொண்ட பாலென்றுணரலாம். பால் கெட்டதாயிருந்தால் அதில் காற்றுப் படப்படப் புளிப்பேறும். நஞ்சுள்ள பாலைப் பருகுவதினால் உண்டாகும் பலவகைத் தாய நோய்களுள் குடலைப்பற்றும் வியாதியைப்போலக் கொடிது வேறொன்றுமில்லை. தீயபாலையுண்டு மாண்ட குழந்தைகள் அனந்த

கோடி. பெரியவர்கள் அப்பாலை உட்கொண்டு வயிற்றுளைவினுல் வருந்துவார்கள். பாலின் கூறுபாட்டைப்பற்றி லந்தன்நகரத்திலுள்ள "டைம்ஸ்" பத்திரிகையில் விரித்துரைக்கப்பட்டிருக்கிறது. ஆவுண்டநீரில் எவ்வகைப்பட்ட அணுரூபமான ஜந்துக்களிருந்தனவோ அவையே அவ்வாவின் பாலிலுமிருந்ததைக் கண்டுபிடித்திருக்கிறுர்கள். ஆகையால், கெட்டதண்ணீரைக் கறக்கிறமாட்டுக்குக் காட்டலாகாதென்பதற்கு இதைவிட வேறென்ன சொல்லவேண்டும்? பரமாணுஜந்து சாஸ்திரமானது இன்னும் நன்ருய்க் கண்டறிந்துகொள்ளப்படவில்லை ஆதலால், பாலிலுள்ள சிற்றுயிர்களைத் தெளிவாய் அறிந்துகொள்ளக்கூடவில்லை. இந்நூலறிவு நன்ருய் உண்டாகுமாயின் ஜலத்திலுள்ள அணுக்களை வெகு திட்டமாய் அறிந்துகொண்டு எத்தனையோ நன்மையைப்பெற்று நாம் சுகித்து வாழ்ந்திருக்கலாம், அசுத்தமான ஜலத்தை யாரும் பருகார், பசு முதலியவற்றிற்கும் வாரார்.

தேகசுகத்தை விரும்புமவர்கள் பசுவைப்பாராது அதன் பாலை ஒருபொழுதும் பருகலாகாது. நமது மனதாரப் பசுவுக்குச் சிறந்த புல்லிட்டு, நன்னீர்வார்த்து, தினப்படி அதன் உடம்பழுக்குப் போக நன்ருகக் குளிப்பாட்டி, ஈரப்பிடிப்பில்லாததும் போதுமான விசாலமுள்ளதும், நிர்மலமாய்க் காற்று உலாவுகின்றதுமான கொட்டிலில் கட்டப்பட்டிருக்கும் பசுவின் பாலைப் பருகுவோர்க்கு வேறொன்றும் வேண்டாம்; அப்பாலே அமிழ்தினுமாற்றவினிதாகும். நமது நகரங்களில் மிகவும் குடிநெருக்கமான இடங்களிலுள்ள ஏழைகள் தங்கள் பெரிய குடும்பத்தோடு வெகு சொற்பமான வீடுகளில் வசித்துக்கொண்டு, அடிவைக்க இடமில்லாததும், வெகுகாலமாகக் குப்பையும் சேத்தையும் குவிந்து சேறும் சகதியுமானதும், எந்நேரமும் துர்க்கந்தம் வீசிக்கொண்டிருக்கிறதுமான சாணிடத்தில் மாட்டையும் கட்டிக்கொண்டிருந்தால் அந்த மாட்டின் பாலினும் கொடியநஞ்சு வேறென்னுண்டு? வெளுத்ததெல்லாம் பாலாமோ? எலிப்பாழிபோலிருக்கிற சிறியவீட்டில் பலர் குடியிருந்துகொண்டு என்புமுறியப் பாடுபட்டு அகப்பட்டதை அரைவயிற்றுக்கும் கால்வயிற்றுக்கும் காய்ச்சிக் குடித்துவிட்டு மாட்டையுங்கூடக் கட்டிக்கொண்டிருக்கும் ஏழைகள் வீட்டில் அவ்வெளியவர்களுக்கும் சுகமில்லை; அம்மாட்டிற்கும் சுகங் கிடையாது. இதை அறிந்தும் அறியாதவர்கள்போலிருப்பதும் நன்றன்று; இவ்வாருன இடங்களிலுள்ளவர் மீளாநோய்க்கு ஆளாவது நிச்சயமேயாம். இவ்வாருன இடங்களைக் காண்கையிலே தானே அச்சமாயிருக்கும். விஷபேதியேயன்றிச் சொறி சிரங்கு முதலியவைகளுக்கும் இவ்விடம் பிறப்பிடமாகும். க்ஷயரோகத்திற்கு இவ்வாருன பசுவின்பாலே காரணமுமாகிறதென்றும் கண்டிருக்கிறுர்கள்.

பசுவுக்கு உண்டாகிற நோயை அது காணும்போதே அறிந்து கொள்வது எளிதன்று. அந்நோய் சிலநாள்மட்டும் வெளிப் படாது கபடமாய் மறைந்திருக்கும். வியாதியின் ஆரம்பத்தில் அதன் மடி சற்றுப் பருத்துப் பாலும் கொஞ்சம் அதிகமாகவே கறக்கும். ஆயினும், இருந்தாற்போலிருந்து மாடு துரும்பாயிளைத்து நாளடைவில் பால்வற்றிப்போய் அதற்குக் கழிச்சலெடுக்கும். ஆதலின் காரணமின்றி அதன் மடியிலுள்ள விசைநரம்பினுல் மடி எப்பொழுதுமுள்ள அளவுக்கு மிஞ்சிப் பெருக்கத் தலைப்பட்ட பொழுதே அம்மாட்டிற்கு நோயுண்டாயிற்றென்று அறிந்துகொண்டு, அதன் பாலை உண்ணுவதை நிறுத்திவிடவேண்டும். பசுவின் மடியில் முலைக்கண்ணைப்பார்த்தால் அது நோய்கொண்டிருக்கிறதும் இராததும் தெரியும்.

பசுவின் மடியில் உண்டாகிற நோயும், மனிதர் தொண்டைக்குள் உண்டாகிற குரல்வளைக் கொதிப்பும் ஆகிய இவை இரண்டும் ஒன்று தானென்று சிலர் கண்டறிந்துசொல்லுகிருர்கள். மாட்டுமடியில் உண்டாகும் நோயை அதன் மடி பருத்திருப்பதினுலும், கறக்கும்போது அம்மாடு பாலைக் கறக்கவொட்டாதிருப்பதினுலும் கண்டுகொள்ளலாம். இந்த வியாதியானது மடிமுழுவதிலும் பற்ருமல் ஒன்று அல்லது இரண்டு முலைக்காம்புகளில்மாத்திரம் வலியிருக்குமாதலால், இந்த உண்மையறிந்தவர்கள் மாட்டை வருத்தப் படுத்தாமல் வலியில்லாத முலையின் வழியாய்ப் பாலைக் கறந்துகொள்ளுகிருர்கள்; இதுதான் விஷமுள்ள பால். இதன் பீர் பிசுக்குப் பிசுக்கென்று அரக்குப்போலக் கம்பிகம்பியாய் நீளும்; அன்றியும் ரத்தமுஞ் சீழும் நுட்பமாய் மேலாடிப் பாலில் மிதக்கும்; கறந்த சிறிது நேரத்திற்குளெல்லாம் பால் புளித்துப்போகும்; பெரியவர்கள் சாப்பிட்டால் குரல்வளை நோயுண்டாகும்; சிறுகுழந்தைகளுக்குக் கொடுத்தால் உதடு புண்ணுகும். காற்கசப்பு, வாய்க்கசப்புள்ள மாட்டின் பாலைப் பருகினுல் மனிதர்களுக்கும் அந்நோய் ஒருவாறுண்டாயினும் உண்டாகும். ஆனுல் இந்தக் கசப்பினுல் கோமாரி முதலிய கொள்ளைநோய்களினுல் உண்டாவதுபோல மாட்டுக்குப் பெரும்பான்மையாய்ச் சாவுண்டாகிறதில்லை. ஆதலாலும், பால் அதிகமாய் வற்றுகிறதில்லை ஆதலாலும் அந்தப் பாலைப் பருகுவதினுல் இந்நாட்டில் அதிகமாய்த் தீங்குவிளைகிறதில்லையென்றும் தெரியவருகிறது. நாம் நமது தாய்வயிற்றிலிருந்து பிறந்ததுமுதல் சோறு உண்ணத் துவக்குகிறவரையில் பாலே நமக்கு ஆதாரமாதலால், எல்லோரும் இதைப்பற்றிய விஷயங்களையெல்லாம் அறிந்துகொண்டு நல்லபாலைப் பானஞ்செய்யப்புகுந்தால் "நோய்க்கிடங் கொடேல்" என்று ஔவைசொன்னபடி பிணியின்றி வாழ்ந்திருக்கலாம். காவிரியாறுபோன்ற ஆரோக்கியமான நதியின் படுகைபூமியில் வளருகிற செழும்புல்லைத் தின்று அவற்றின் நன்னீரைக் குடித்

துவிட்டு அந்நதியில் குடைந்தாடி நிர்மலமாயிருக்கிற ஆவின்பாலைப் பருகுவோரை அமிர்தபானம் பண்ணுகிறவர்களென்னலாம். பால் நல்லதாயிருந்தால் அதைப்போலத் தேகத்துக்கு ஆரோக்கியமானது வேறில்லை; அது கெட்டதாயிருந்தால் அதைப்போலத் தீங்கிழைப்பதும் வேறொன்றில்லை.

இராஜாராம் மோகன்ராய் சரித்திரம்.

மிகுந்த மேதாவியும், சுதேச பாஷைகளேயன்றி இங்கிலீஷ், அரபிமுதலிய பரதேசத்துப் பலபாஷைகளையும் நன்றாய்க் கற்றறிந்தவருமான இராஜாராம் மோகன்ராய் என்பவர் வட இந்துஸ்தானத்தில் பர்த்துவான் அல்லது வர்த்தமானபுரம் ஜில்லாவைச்சேர்ந்த இராதாநகரத்திற் பிறந்தவர். இவர் ஜாதியில் பிராமணர். இவருடைய பாட்டன் மூர்ஷதாபாத்திலிருந்த மொகலாயரின்கீழ் உத்தியோகம் செய்துவந்து அங்கேயே தேகவியோகமாயினர். பின்பு இவருடைய தகப்பனான ராமகண்டராய் மூர்ஷதாபாத்திலேயே சிலநாளிருந்து அவ்விடத்துப் பிரபுக்களுக்குத் தன்மீது பொறாமை உண்டானது தெரிந்துகொண்டு அவ்விடம் விட்டுத் தன் சொந்த ஊரான இராதாநகரம் போய்ச்சேர்ந்தார். அவ்விடத்தில் ராம் மோகன்ராய் தான் பிறந்த ஏழெட்டுவயதிலேயே தகப்பனரிடத்தில் தன் சொந்தபாஷையான பாரசீகபாஷை கற்றுத்தேர்ந்து, பிறகு பாட்னாவுக்குப் போய் அங்கே அரபிபாஷை கற்கத்தொடங்கி அதிலும் சிறந்த பண்டிதராகி, அரபிபாஷை கற்பித்த உபாத்தியாயர் கிரீக்பாஷையிலிருந்து அரபிபாஷையில் மொழிபெயர்த்து எழுதிவைத்திருந்த க்ஷேத்திரகணிதம் முதலிய புஸ்தகங்களையும் படித்து மிகுந்த நுட்பபுத்தியுடையவராகி, எந்தப்பாஷையாயினும் எவ்வளவு கடினமான விஷயமாயினும் எளிதில் கிரகித்துக் கொள்ளும் திறமையுடையவராயினர். அதன்பிறகு காசிக்குச் சென்று அங்கே ஆரியபாஷை அப்பியசித்து அப்பாஷையிலுள்ள தர்க்கம் வியாகரணம் முதலிய பல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்து கல்விக்களஞ்சியமெனக் கற்றோர் மற்றோர் அனைவராலும் கொண்டாடப்பட்டுத் தன் ஊர்வந்து சேர்ந்தார்.

அவர் மிகுந்த ஈச்வரபக்தியுடையவர். பிரதிதினம் தப்பாமல் காலையில் பகவத்கீதை பாராயணம் செய்துவருவார். மற்றவேளைகளில் சித்தாந்தக் கிரந்தங்களைப் படித்து அவற்றிலுள்ள நுட்பங்களை ஆராய்ந்து அறிந்துவருவார். இப்படியிருக்க அவ்விடத்தில் தந்தைக்கும் மகனுக்கும் மதசம்பந்தமான சில விவாதங்கள் உண்

டாக, அதுநிமித்தம் அவ்வூரிலிருக்க மனமில்லாமல் ராம் மோகன் ராய் ஊனைவிட்டுப் பல தேசங்களுக்குச் சென்று அந்தந்தத் தேசத்துப் பாஷைகளைக் கற்றுக்கொண்டு தேசசஞ்சாரம் செய்து வந்தார். இமயமலைக்கு வடபாரிசத்திலுள்ள திபெத்துதேசத்துக்கும் போய் அத்தேசத்தில் பரவியிருந்த பு[illegible]ஷை யும் கற்று அச்சமயத்திலுள்[illegible]ஷயங்களையும் கண்டறிந்தார். இப்படிச் சிலகாலம் நடந்துவருகையில் தகப்பன் அவரைத் தம் ஊருக்கு வரும்படி அழைக்க, அப்படியே அவர் அவ்விடம்போய்ச் சேர்ந்து அங்கே அங்கிலேயபாஷை கற்கத்தொடங்கி, அதில் உபாயமான யோக்கியதை சம்பாதித்துக்கொண்டனர். இப்படியிருக்க 1804-ஆு அவருடைய தந்தை பரலோகமடைந்தார். உடனே சிலகாலத்தில் சகோதரர்களும் அதேகதி அடைந்துபோயினர்.

பிறகு ராம் மோகன்ராய் சிறிதுகாலம் ஈஸ்து இந்தியா கம்பெனியாரிடத்தில் உத்தியோகஸ்தராய் அமர்ந்திருந்து அப்போது அங்கிலேயபாஷை நன்ருய்ப் பேசவும் திருத்தமாய் எழுதவும் கற்றுக்கொண்டார். இவ்விதமே சிலவருஷகாலமிருந்து 1814-ஆுத்தில் கல்கத்தாவுக்குச் சென்று அங்கு ஒரு பெரிய தோட்டத்திலிறங்கியிருந்து அவ்விடத்துப் பல பண்டிதர்களைச் சேர்த்துக் கொண்டு அவர்களுடன் மதவிஷயமாயும் மற்றும் பல சாஸ்திர விஷயமாயும் பிரசங்கங்கள் செய்துவந்தார். மேலும் ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்து பற்பல வேதாந்தவிஷயங்களை பங்காளிபாஷையிலும் இந்துஸ்தானிபாஷையிலும் மொழிபெயர்த்தெழுதி அச்சிட்டுப் பிரசுரஞ்செய்தார். ஸ்திரீகள் ஸஹகமனம்செய்வது அதாவது உடன்கட்டையேறுவது யுக்தமானதல்லவென்று வினுவிடையாக ஒரு புத்தகம் எழுதி அதையும் அச்சிற்பதிப்பித்து விளம்பரஞ்செய்தார். இவ்வினுவிடைப் புத்தகத்தைப்பார்த்து 1825-ஆுத்தில் கவர்னர் ஜனரலாக வந்த லார்ட்டு வில்லியம் பென்டிங்கு துரையவர்கள் ஸ்திரீகள் ஸஹகமனம்செய்வது கூடாதென்று ஒரு சட்டம் ஏற்படுத்தினுர். இப்படிப்பட்ட மிக்கவிசேஷமான இவருடைய பாண்டித்தியத்தை அயர்லாந்துதேசத்தின் ஒரு பாகமான மண்ட்ஸருக்கு அதிபதியான கர்னல் பிட்ஸ்கரன்ஸன் துரையவர்கள் கேள்வியுற்று, கடிதமூலமாய் இந்த ராம் மோகன்ராயினுடைய சிநேகம் சம்பாதித்து, இவருடைய பாண்டித்தியமும் புத்தியின் பெருமையும் இவ்வளவென நன்ருய்த் தெரிந்துகொண்டு மிகவும் சந்தோஷமடைந்தார்.

பிறகு டில்லி பாதுஷாவானவர் தன் வியவகாரங்களைக்குறித்து லந்தன்நகருக்குச்சென்று பார்லிமெந்து சபையில் வாதிக்கவேண்டுமெனக் கருதி அதற்காக ராம் மோகன்ராயருக்கு அதிகாரபத்திரம் (வக்காலத்துநாமா) கொடுக்க, அதைப் பெற்றுக்கொண்டு இவர்

அக்காரியத்தை நிறைவேற்றும்பொருட்டு 1831-ஹூத்தில் இங்கிலாந்துக்குப் போயினார். அவ்விடத்திய பண்டிதர்கள் பலர் இவர்க்குப் பலபாஷைகளிலுமிருந்த கல்வியறிவையும் யோக்கியதையையும் கண்டறிந்து மிகவும் ஆநந்தித்து இவரை மிகவும் மரியாதையாகவும் பிரியமாகவும் வரவழைத்து அன்புபாராட்டிவந்தனர். இவரும் தா[illegible] நிறைவேற்றினபிறகு அங்குள்ள பலதேசங்களையும் போய்ச் சுற்றிப்பார்த்து அங்கங்குள்ள அதிசயங்களைக் கண்டுகளித்து, அவ்வவ்விடத்துப் பண்டிதர்களாலும் பிரபுக்களாலும் பெருமைப்படுத்தப்பட்டு மறுபடி இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்தார்.

அதன்பிறகு அவ்விடத்திலேயே தேகசவுக்கியம் குறைந்துஜ்வரம் ஸம்பவித்துத் தனக்கு அறுபதாவது வயதாகிய 1833-ஹூ இவர் பரலோகமடைந்தனர்.

பின்பு அவருடைய பிரேதமானது ப்ரிஸ்தல் நகரத்தில் அர்னூல்ட்ஸ் எனும் நந்தனவனத்திலே அடக்கஞ்செய்யப்பட்டது. பிறகு இந்த ராம் மோகன்ராயின் தோழனுகிய துவாரகநாத டாகர் அவர்கள் இவருடைய ஞாபகசின்னமாக அவ்விடத்தில் ஒரு பெரிய சமாதியைக் கட்டிவைத்தார். இவர் பிற்காலத்தில் மதக்கோட்பாடுகளில் பேதப்பட்டுப்போயினராயினும் பிறப்பிலே பிராமணஜாதியில் வைஷ்ணவமதஸ்தராகையால், இவர் காலத்துக்குப்பிறகு இவருடைய தாய்முதலியவர்கள் தம் ஊரைவிட்டு ஜகந்நாதத்தில் வந்து சேர்ந்து அங்கேயே காலம்கழித்தார்கள்.

அவருடைய சமாதிச்சிலையிலே அடியில்கண்ட கருத்துள்ள வரிகள் வரையப்பட்டிருக்கிறன;—"இதன்கீழ் அடக்கம்செய்திருப்பது ராஜாராம் மோகன்ராயினுடைய உடல். இவர் மனப்பூர்வமாய்த் தெய்வமொன்றேயென்னும் உறுதியான கோட்பாடுடையவர்; தெய்வபக்தியிலேயே தன் வாழ்நாளையெல்லாம் விநியோகப்படுத்தியவர். தெய்வானுக்கிரகத்தால் பிறப்பிலேயே மகா மேதாவியாகப் பிறந்து நாநாபாஷைகளையும் பரிபூரணமாகக் கற்றுணர்ந்து இளமைப்பருவத்திலேயே மகா பண்டிதரெனப் பிரசித்திபெற்றவர்; இந்துதேசத்துப் பிரஜைகளுக்குப் பலவித நன்மைகளையும் உண்டாக்கிக் கொடுக்கும்படி பலவாருகப் பாடுபட்டார். இந்தியாவிற்பிறந்து வளர்ந்த இவர் கடைசியில் உற்ருர் உறவினர் எல்லோரையும் விட்டுப்பிரிந்து 3000 காததூரம்சென்று இங்கிலாந்தில் இறந்துபோயினர்" என்றிப்படி எழுதியிருக்கின்றது.

சகோதரப்பிரீதி.

இவ்வுலகத்தில் ஜனங்கள் அனைவரும், அண்ணன் தம்பி, மாமன் மாமி, அக்காள் தங்கை, மைத்துனன் மைத்துனி என்று இப்படிப் பலவிதமான சம்பந்தமுள்ளவர்களாயிருக்கின்றனர். அவர்களில் சகோதரர்தவிர மற்றவர் எல்லாம் எவ்விடத்திலும் எளிதாய்க் கிடைப்பவர்கள்; சகோதரர்களும் சகோதரிகளுமோ அப்படிக் கிடைக்கத்தக்கவர்களல்லர். ஆகையால் எவராயினும் உடன்பிறந்தவர்களிடத்தில் மிகப் பிரீதியுடையவர்களாய் ஒருடம்பு ஈருடம்பாய் வந்ததென்று ஒத்து உறவாடி வாழ்வது மிகவும் மேலானது. உடன்பிறந்தவர்கள் அப்படி ஒருவர்க்கொருவர் பிரீதியும் ஒற்றுமையும் இல்லாமல் நடப்பார்களாயின் அப்படிப்பட்டவர்களை மிருகப்பிறப்பென்றே கருதவேண்டும். தன்னைவிடத் தன் சகோதரர்களைப் பிரீதியாய்ப் பாதுகாத்து வந்ததற்குத் திருஷ்டாந்தமான கதைகள் நாம் அநேகம் கண்டும் கேட்டுமிருக்கிறோம். அவற்றுள் ஹிந்துக்களின் புராணக்கிரந்தங்களில் ஆதிகாவியமென்று புகழப்படும் வால்மீகராமாயணத்திலுள்ள கதையையும், ஐந்தாவது வேதமென்று கொண்டாடப்படுகின்ற மகாபாரதத்திலுள்ள கதையையும் இதற்கு ஒரு நிதர்சனமாய் அடியில் எழுதுகிறோம்.

விஷ்ணுவின் பூர்ணவதாரமென்று சொல்லப்படுகிற ஸ்ரீராமபிரான் "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" என்றபடி தந்தையின் ஆணையைச் சிரமேற்கொண்டு பாரியையாகிய சீதாதேவியுடனும், தம்பியாகிய இலக்குமணனுடனும் வனவாசம் செய்யும்பொருட்டு நாட்டைவிட்டுக் காட்டுக்கேக, அங்கே தெய்வச்செயலால் நேரிட்ட விரோதத்தினால் இலங்கைத்தீவை ஆண்டுவந்த இராவணனென்னும் ஒரு கொடிய அரக்கன்மேல் படையெடுத்துப் போர்செய்தபோது, இலக்குமணன் இராவணனுடைய குமாரனான இந்திரஜித்தென்பவனைக் கொன்றனன். அதுகேட்டு இராவணன் மிகத் துயரமடைந்து, அந்த புத்திரசோகத்தால் பொங்கியெழுந்த கோபாக்கினியினால் எரிந்துகொண்டு போர்க்களத்திற்கு வந்து இலக்குமணனை எதிர்த்துப் போராடப்புகுந்து தனக்கு மாமனான மயன்கொடுத்த சக்தியென்னும் உக்கிரமான ஒரு படையை அவன்மேற் பிரயோகித்தனன். அது அதிக பயங்கரமாய் ஓடிவந்து மார்பிற்பாய, இலக்குமணன் மூர்ச்சைபோய்க் கீழே விழ்ந்தனன். அதுகண்டு ஸ்ரீராமன், துக்கமும் கோபமும் மனதில் அதிகரிக்க, சத்துருவான இராவணன் மேல் அம்புமழைபொழிந்து அவனை அப்போர்க்களத்தினின்றும் ஓடிப்போம்படிசெய்து, அந்த யுத்தபூமியில் உதிரம்பெருகி உடம்பு முற்றும் நனைந்து உயிர்நீத்தவன்போல விழ்ந்துகிடந்த தம்பியினி

டம்வந்து, தம்பி! நான் காட்டுக்குப் புறப்பட்டபோது என்னிடத்தில் மிகுந்த சகோதரப்பிரீதியால் என்னைவிட்டிருக்க மனம்பொருமல் என்னுடன் வந்து, அரணியத்தில் சிங்கம், செந்நாய், புலி, கரடி, கோநாய், குடத்தி முதலிய பல பயங்கரமான கொடிய மிருகங்களால் எனக்கு யாதொரு தீங்கும் நேரிடாவண்ணம் பரிவுடன் என்னைப் பாதுகாத்துவந்த நீ இப்போது இந்தப் பயங்கரமான போர்க்களத்தில் பகைவன்கையில் பிடிபட்டுப்போகலாமா? இந்திரஜித்தைப்போன்ற மகாசூரனைக்கொன்ற உனக்கு இராவணனுடைய சக்தியினுல் எப்படி அபாயம் நேரிடலாம்! உனக்காவது! சாவாவது! வருவதாவது! கொடியவர்களும் சூரர்களுமான சத்துருக்களுடன் போராடிப் போராடி அதனுலுண்டான ஆயாஸத்தினுலேதான் நித்திரையின் சுகத்தை ஒருநாளும் அறியாதவன்போல இப்பொழுது இந்தக் கரடுமுரடான யுத்தபூமியில் வீழ்ந்து தூங்குகிருயோ! இது நீ தூங்குவதற்கேற்ற தருணமன்று; சீக்கிரம் எழுந்திரு. பகைவருடன் போராடி வெற்றிபெற்றுப் பிறகு படுத்திருக்கலாம் என்று இப்படிப் புலம்பினுன். பின்னர் பலவிதமாய் அவற்குச் சீதோபசாரம் செய்தும் களையைப்போக்கமாட்டாமல் சோகம் அதிகரித்தவனுய் மிகவும் மனங்கலங்கி, என் அருமைத்தம்பி! உன்னைப் போர்க்களத்தில் பறிகொடுக்கத்தானே நான் இக்காட்டுக்கு வந்தேன்! இனி நான் யாதுசெய்யவல்லேன்! நான் அயோத்திக்குச் செல்லும்போது இலக்குமணன் எங்கேயென்று உன் தாய் கேட்பாளானுல் அவளுக்கு என்னசொல்வேன்! தம்பியைப் பகைவர் கையிற் பறிகொடுத்து வந்துவிட்டேனென்று சொல்வேனு? ஆ! கூடப்பிறந்தவன் கூற்றுக்கிரையாய்ப்போனபின் நான்மாத்திரம் இப்பூமியில் வாழ்ந்திருப்பேனு? உலகத்தில், பெண்சாதிபிள்ளை, பந்துமித்திரன் முதலியோர் எத்தேசத்திலாயினும் சுலபமாய்க் கிடைப்பார்கள்; கூடப்பிறந்த பிறப்பு எத்தேசம்போனுலும் கிடைக்குமா? அதிலும் இப்படி உன்னைப்போல் மிகுந்த பக்திசிரத்தையுடன் வணங்கிக் காத்திருக்கின்ற அருமைத்தம்பி எங்கேயாவது கிடைப்பானு? எவ்வளவோ புண்ணியஞ்செய்து எல்லா நற்குணங்களும் அமைந்த நீ எனக்குத் தம்பியாகக் கிடைத்தாய். இத்தன்மையான உன்னைப் பறிகொடுத்துவிட்டு மறுபடி அயோத்திபக்கம் திரும்புவேனு? என்று இவ்வாறு பலவிதமாய் ஸ்ரீராமன் ஸர்வஞனுயினும் ஸாதாரண ஜனங்கள்போலப் பிதற்றிப் புலம்பினுன். அதுகண்டு விபிஷணன், சுக்கிரீவன், ஜாம்புவன், ஸுஷேணன் முதலியவர்கள் பலவிதமாய்த் தேற்றாவுசொல்ல, சிறிது மனந்தேறி மிகுந்த ஸாமர்த்தியமுடையவனுன அனுமானையனுப்பித் துரோணபருவத்தினின்றும், ஸஞ்சீவகரணி, ஸந்தானகரணி, விசல்லியகரணி, ஸவர்ணகரணி என்னும் மூலிகைகளைக் கொண்டுவரச்செய்து அவைகளால் இலக்குமணனைக் களைதெளிவித்து, கொல்லப்படா

மல் மிகுந்திருந்த பகைவர்களை நிர்மூலப்படுத்தி இலக்குமணனுடனும் சீதையுடனும் கூடி அயோத்திக்குச் சென்று சுகமாய்ச் சில காலம் பிரஜைகளைப் பரிபாலித்துவந்தான். ஆதலால் எவர்க்கும் சோதரர்களைப் பகைத்துப் பிரிவினைகொண்டிருப்பது தகுதியான தன்று.

2. இதுமாத்திரமேயல்ல; மற்றொன்றும் கேளுங்கள்: குருவம்சத்தில் மிகப் பிரசித்தரான பாண்டவர்கள் தம் பெரியதந்தை மக்களான துரியோதனாதிகளுடன் மாயச்சூதாடித் தோற்று, ஏற்பாடுசெய்துகொண்ட பந்தயப்படி பட்டணம் விட்டுப்போய் வனவாசம் செய்துகொண்டிருக்கையில், சிலநாளைக்குப்பிறகு ஒருநாள் ஒரு பிராமணன் மிக்க விசனமடைந்து அவர்களிருந்த ஆச்சிரமத்துக்கு வந்து, ஓ புண்ணியவான்களே, நான் இவ்விடத்துக்குச் சமீபத்திலிருக்கும் ஒரு ஆச்சிரமத்தில் வசிக்கிற பிராமணன்; காலந்தப்பாமல் சகலமான வைதிகச் சடங்குகளையும் நடத்திக்கொண்டு வருபவன். இன்று எங்கிருந்தோ ஒரு மான் என் ஆச்சிரமத்துக்கு வந்து நான் அக்கினி கடைந்தெடுக்கும் அரணிக்கட்டையின்மேல் உராய்ந்து அந்தக் கட்டை தன் கொம்புகளில் மாட்டிக்கொள்ளவே, மிகத் திகில் அடைந்து வெருள வெருள விழித்துப்பார்த்து அந்தக் கட்டையோடு கூடவே ஓடிப்போய்விட்டது. அந்த அரணிக்கட்டை இல்லாமல் இப்பொழுது என்னுடைய வைதிககாரியங்களெல்லாம் கெட்டுப்போகின்றன; நீங்கள் என்னிடத்தில் கருணைகூர்ந்து அதைப் பிடித்துக்கொடுத்து எனது நித்தியகருமங்களுக்கு இடையூறு நேரிடாவண்ணம் என்னைக் காக்கக்கடவீர்கள்; இது உங்களுக்கு மிகவும் சுகிர்தமாகும் என்று பாண்டவர்களை வேண்டிக்கொண்டனன்.

அதுகேட்டு அவர்கள் அப்படியே ஆகட்டுமென்று அதற்கு உடன்பட்டு வில்லும் அம்பறாத்தூணியும் தரித்துக்கொண்டு அரணிக்கட்டையை எடுத்துக்கொண்டுபோன மானைப் பிடிக்கும்படி நால்வரும் நான்குபக்கமாய் ஓடி அம்மானைச் சூழ்ந்துகொண்டனர். ஆயினும் அந்த மான் அவர்கள் கையில் அகப்படாமல் எப்படியோ தந்திரமாய்த் தப்பித்துக்கொண்டு அப்புறம் ஓடிப்போய்விட்டது. அதுகண்டு அவர்கள் எப்படியாவது அதைப் பிடித்தே தீரவேண்டுமென்று நெடுந்தூரம் துரத்திக்கொண்டு ஓடினார்கள். எவ்வளவுதூரம் ஓடியும் அது அவர்கள் கையில் அகப்படவில்லை. கடைசியில் அம்புபோட்டடித்து அதைக் கொன்றாலொழிய வேறு வழி இல்லையெனத் தெரிந்து அவர்கள் பாணப்பிரயோகஞ்செய்ய முயல, அச்செய்கைதெரிந்து அந்த மான் அவர்கள் கண்ணுக்கு அகப்படாமல் மறைந்துபோய்விட்டது. அதைக் கண்டு பாண்டவர்கள், ஐயோ நாம் இந்த மானைப் பிடிக்கமாட்டாமற்போனோமே! இதனால் நம்மை நம்பின வேதியனுக்கு நித்தியகரும லோபம் சம்ப

விப்பதுமாத்திரமேயன்றி நமது பராக்கிரமபெருமைக்கும் இழிவு வந்துவிடுமே என விசாரமடைந்தவர்களாய், கீழே கால்பொரிய மேலே மண்டைவெடிக்கக் காய்கிற வெயிலின்கொடுமை பொறுக்க மாட்டாமல் சற்று இளைப்பாறும்படி அண்டையிலிருந்த ஓர் மரத்து நிழலிலே போய் உட்காந்தார்கள்.

அப்பொழுது நகுலன் பெருமூச்செறிந்து தலைதொங்கவிட்டு உட்காந்திருந்த சகோதரர்களைப்பார்த்து விசனமடைந்தவனாய் தர்ம ராஜனைநோக்கி, அண்ணா, உத்தமகுலத்திலே ஜனித்து நற்செய் கைகளை பயபக்தியோடு நடத்திக்கொண்டு பூததயை பச்சாதாப முடையவர்களாய் தர்மநெறிதவறாமல் ஒழுகுகின்ற நமக்கும் இவ்விதமான துன்பங்கள் நேரிடுகின்றனவே; இதற்கு என்ன நிமித்தம் என்று வினவினான். அதுகேட்டுத் தருமராஜன் "பூர்வ ஜன்மத்திலே நாம் செய்த புண்ணியபாபங்களே இப்பொழுது நம் முடைய சகலமான சுகதுக்கங்களுக்கும் காரணமாயிருக்க இந்தத் துன்பங்களுக்குமாத்திரம் வேறொருகாரணம் உளதா? ஜன்மாந்தரத் திற்செய்த பாபபுண்ணியங்கள் அனுபவித்தே தீரவேண்டும்" என்று மறுமொழி பகர்ந்தனன். அதுகேட்டுப் பீமசேனன் "தம்பி, அந்த மகாசபையிலே திரௌபதியை இழுத்துக்கொண்டுவந்தபோதே அந் தக் குருடன் பிள்ளைகள் நூறுபேரையும் கொல்லாமல் உபேக்ஷை செய்ததே இந்தத் துன்பங்களுக்குக் காரணம்" என்றனன். பிறகு அர்ச்சுனன் "அல்ல அல்ல; அப்பொழுது காதினால் கேட்கக்கூடாத ஈனமான கொடியபேச்சுகளைப் பேசின கர்ணனை அப்பொழுதே நாக்கறுக்காமல் சும்மாவிருந்தேனே, அதனாலேதான் இவ்விதமான விபத்துக்கள் விளைகின்றன" என்றான். பிறகு சகதேவன் "நம்மை மாயச்சூதாடுவித்து மோசஞ்செய்த வஞ்சகனான சகுனியை அப் பொழுதே நாம் மண்ணோடு மண்ணாக்காமல் காட்டுக்கோடிவந்தோ மே அதுதான் இவ்வளவுக்கும் ஆதிகாரணம்" என்று கூறினான்.

இப்படி இவர்கள் பேசின பேச்சுக்களையெல்லாம் கேட்டுத் தர்ம புத்திரன் நகுலனைநோக்கி "உன் அண்ணன்தம்பிமார்கள் அனைவ ரும் வெயிலிலே நெடுந்தூரம் திரிந்து மிகவும் இளைப்படைந்தி ருக்கின்றனர். இம்மரத்தின்மேல் ஏறி இவ்விடத்துக்குச் சமீபத் தில் எங்கேயாவது தண்ணீர் இருக்கின்றதா பார்" என்று சொல்ல, அவன் அப்படியே அம்மரத்தின்மேல் ஏறி நான்குபக்கமும் பார்த்து ஓர் புறத்தில் சிறிதுதூரத்திற்கப்பால் ஓர் தடாகம் இருக்கக்கண்டு அச்செய்கையை அண்ணனுக்கு அறிவித்தனன்.

அதுகேட்டுத் தர்மராஜன், இப்பொழுது நமக்குள் நீயே மிகவும் களைத்தவனாகக் காணப்படுகிறாயாதலால், நீயே மெல்ல அத்தடா கத்திற்குப் போய் உன் களைதீரத் தண்ணீர்குடித்து எங்களுக்கும் குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவா என்று சொன்னான். அப் டியே ஆகட்டுமென்று நகுலன் அம்மரத்தினின்றும் இறங்கி, அதிசீக்

கிரமாய் அந்தத் தடாகத்திற்கு ஓடினுன். அதிலிறங்கி அவன் தண்ணீர் குடிக்கப்போகிற தருணத்தில் "குழந்தாய் இந்தத் தடாகம் என்னுடையது; என் உத்தரவில்லாமல் இதில் எவனும் தண்ணீர் குடிக்கக்கூடாது; நான் கேட்கிற கேள்விகளுக்குத் தகுந்த விடை கொடுத்து என்னிடம் அநுமதிபெற்றுக்கொண்டுதான் எவனுகிலும் இந்தத் தண்ணீரைத் தொடவேண்டும்" என்று ஆகாயத்தில் ஒரு சத்தம் கேட்டது. ஆயினும் அவன் மிகவும் களைத்திருப்பவனுதலால் அந்தப் பேச்சைக் காதில் பேர்ட்டுக்கொள்ளாதவன்போலவே அதிவிறங்கித் தண்ணீர்குடித்து விஷத்தைப் புசித்தவன்போல உடனே மெய்ம்மறந்து மூர்ச்சைபோய்க் கீழேவிழுந்தான்.

மரத்தடியில் உட்காந்திருந்த தர்மபுத்திரன் சிறிதுநேரம் காத்திருந்து தண்ணீர்கொண்டுவரப்போன தம்பி திரும்பிவராமைகண்டு, அவனைப்பார்த்து அழைத்துக்கொண்டுவரும்படி சகதேவனை அனுப்பினுன். அப்படியே சகதேவன் புறப்பட்டு அந்தத் தடாகத்தண்டைபோய், அங்கே தன் அண்ணன் கிடக்கின்ற கிடையைக்கண்டு விசனமடைந்தானுயினும், நம் இளைப்பைத் தீர்த்துக்கொண்டு பிறகு இதைப்பற்றி விசாரிக்கலாமென்று தண்ணீர் குடிக்கப்போயினன். நீர் குடிக்கப்போகிற தருணத்தில் முன் நகுலனுக்குக் கேட்டதுபோலவே இவனுக்கும் அந்தப் பேச்சுக் கேட்டது. ஆயினும் அவனும் அதை லட்சியஞ்செய்யாமலே நீர்பருகி மதிமயங்கிக் கீழேவிழுந்தான்.

போனவன் திரும்பிவருவானென்று தர்மபுத்திரன் நெடுநேரம் எதிர்பார்த்திருந்தான், இவனும் வரவில்லை; அதனுல் அவர்கள் கதி என்னவாயிற்றோ போய்ப் பார்த்துக்கொண்டுவரும்படி அர்ச்சுனனை அனுப்ப, அவனும் அத்தடாகத்தண்டைபோய் அங்கே செத்தவர் போல விழுந்துகிடந்த தம்பிகளைப் பார்த்து மிகவும் விசனமடைந்தான். ஆயினும் அதன் காரணத்தை அப்புறம் தெரிந்துகொள்ளலாமெனத் தடாகத்தினுள்ளிறங்கித் தண்ணீர்குடிக்கப்போனுன். அத்தருணத்தில் முன்போலவே அதேவிதமான பேச்சு அவன் காதிலும் விழுந்தது. அதுகேட்டு அவன் மிகக் கோபங்கொண்டு, யாரோ ஒரு மாயாவி என் தம்பிமார்களை வஞ்சித்து இப்படிச் செய்திருக்கிறுன்; அவனை இப்பொழுதே நான் என் பாணத்திற்கு இரையாக்கிவிடுகிறேன் என்று, எப்புறத்திலிருந்து அப்பேச்சு வந்ததோ அப்புறத்தைநோக்கித் தன்னுடைய ஒலிகொல்லி (சப்தபேதி) யான பாணங்களைப் பிரயோகித்தான். அப்பொழுது உன்னுடைய பராக்கிரமம் என்னிடத்தில் உபயோகப்படாது, வீணே கோபம் கொள்ளாமல் பொறுமையாயிரு. உனக்கு வல்லமையிருந்தால் நான் வினவுகிற வினுக்களுக்குத் தகுந்த விடையளித்துப் பிறகு உன் இஷ்டப்படி தண்ணீர்குடி என்று மறுமொழி உண்டாயிற்று. அதுகேட்டு அர்ச்சுனன், அப்படியா ஆகட்டும்; நான் என்

களையைத் தீர்த்துக்கொண்டு வினுக்களுக்கு விடைகொடுக்கிறேன் என்று சொல்லித் தண்ணீர்குடிக்கப்போனுன்; அவனையும் அவன் தம்பிகளைப்போலவே அது மயக்கிக் கீழே தள்ளிவிட்டது.

பிறகு தர்மபுத்திரன், அர்ச்சுனனும் திரும்பிவராமைகண்டு தன் பெரிய தம்பியான பீமனைப்பார்த்து, அப்பா தண்ணீர்கொண்டு வரப்போன அர்ச்சுனன், நகுலன், சகதேவன் இம்மூன்றுபேரும் என்னகதியானுர்களோ ஒன்றும் தெரியவில்லை; அவர்கள் இந்நேரமும் வராமலிருப்பதற்குக் காரணமென்னவென்று நீ சீக்கிரமாய்த் தெரிந்துகொண்டு வாவென்று சொல்ல, அவன் உடனே புறப்பட்டுப்போயினுன். போய் அக்குளக்கரையிலே தம்பிமார்களெல்லாரும் மூர்ச்சைபோய் விழுந்துகிடக்கக்கண்டு மிகவும் விசனமடைந்து, இது தேவர்களோ, யக்ஷர்களோ, ராக்ஷஸர்களோ செய்த காரியமேயன்றி மனிதர்செய்த காரியமன்று. முதலில் தண்ணீர் குடித்து ஆயாசத்தைத் தீர்த்துக்கொண்டு பிறகு இதன் உண்மையை விசாரிப்போமென்று தண்ணீர்குடிக்கத் தடாகத்துக்குள் இறங்கினுன். அத்தருணத்தில் அந்த ஆகாயவாணியானது, ஐயா நீரும் இப்பிள்ளைகளைப்போலவே ஸாகஸம் செய்யவேண்டாம். இந்தத் தடாகம் நெடுநாளாய் என் அதீனத்தில் இருக்கின்றது; நான் கேட்கிற வினுக்களுக்கு விடைகொடுத்தபிறகுதான் இதில் தண்ணீர் குடிக்கவேண்டும் என்று சொல்லிற்று. ஆயினும் அவன் அந்தப் பேச்சைக் கேளாமலே தண்ணீர்குடிக்கப்போய் மற்றவர்களைப்போலவே மெய்ம்மறந்து மூர்ச்சைபோனுன்.

இப்படித் தம்பிமார்கள் நான்குபேரும் போனதேபோக்காய்த் திரும்பிவராமற்போகவே தர்மபுத்திரன் மிகவும் துயரமடைந்து அவர்கள் போனவழியைப் பிடித்து அவர்களைத் தேடிக்கொண்டு அக்குளக்கரைபோய்ச் சேர்ந்தான். அங்கே செத்தபிணங்கள்போல விழுந்துகிடந்த தம்பிமார்களைப்பார்த்து ஒன்றும் தோன்றுமல் சிறிதுநேரம் கற்பதுமைபோல நின்றுகொண்டிருந்து பிறகு கொஞ்சம் தைரியமடைந்து இப்புறமும் அப்புறமும் திரும்பிப்பார்த்து, இங்கே வேறுமனிதன் எவனுவது வந்ததாகவும் காணப்படவில்லை; ஒருவனேடு யுத்தம் செய்த குறியும் தென்படவில்லை; இவர்கள் உடம்பில் காயமும் ஒன்றும் இல்லை. இப்படியிருக்க இவர்கள் உடம்புதெரியாமல் விழுந்துகிடக்கக் காரணமென்ன? ஒருவேளை மிகக்கொடியனுன துரியோதனன் மிகவும் துராத்மாவும் பாவச்செயல்செய்யப் பின்வாங்காதவனுமாய் மோசமே வடிவமெடுத்து வந்தவன்போன்ற சகுனியின் துராலோசனைப்படி சமயம் எதிர்பார்த்திருந்து இப்பொழுது இவர்களுக்கு இவ்விதமான ஆபத்து விளைவித்தனனே என்னவோ? நெஞ்சுறுதியுள்ள கொடியவர்கள் எப்படிப்பட்ட ஸாகஸச்செயல் செய்யவும் பின்வாங்கார்கள். ஆதலின் அவர்களை எப்பொழுதும் நம்பலாகாது. இப்பொழுது

அவர்களை வெறுத்துப் பயனென்ன? இவர்கள் இக்குளத்துத்தண்ணீரைக் குடித்து, இதன் தோஷத்தினாலேயே இப்படியாயினார்கள் என்று நினைக்கலாம் என்றாலும், இக்குளத்துநீர் விஷத்தன்மையுள்ளதென நினைப்பதற்கும் இல்லை. பூமியையும், இராஜ்யத்தையும் சகலமான பந்துமித்திரர்களையும் பிரித்துக் காட்டுக்குத் துரத்திவிட்ட தெய்வமானது, இத்தன்மையான சங்கடங்களை அனுபவிக்கத்தானோ இவர்களைமாத்திரம் கூடச்சேர்த்தது! ஐயோ நான் இனி இதற்கு என்னசெய்வேன்; இந்தத் துக்கக்கடலினின்று நான் எவ்வாறு கரையேறுவேன்; எந்தமுகத்தைக்கொண்டு பட்டணத்திற்குப் போவேன்; தாயான குந்திதேவிமுகத்தை எவ்வாறு பார்ப்பேன்; குழந்தாய் க்ஷேமமாவென்று கேட்பாளானால் அவளுக்கு என்னபதில் சொல்லுவேன்! என்று இப்படிப் பலவிதமாய்த் தனக்குத்தானே புலம்பி, அதனால் நெஞ்சுலர்ந்து பேசவுங்கூடாமல் நாவறண்டுபோகவே, அந்த வேதனை தாளமாட்டாமல் மெல்ல எழுந்து குளத்திலிறங்கித் தண்ணீர்குடிக்கப்போயினான். அப்பொழுது, "ஐயா நான் ஒரு பறவை, இந்தத் தடாகம் என்னுடையது; இதிலுள்ள மீன் முதலியவற்றைப் பிடித்துத் தின்றுகொண்டு நெடுநாளாக நான் இங்கேயே வசித்துக்கொண்டிருக்கின்றனன்; இதில் என் அநுமதியின்றி எவரும் நீர்பருகக்கூடாது. நான்கேட்கும் கேள்விகளுக்குத் தகுந்த விடைகொடுப்பாயானால் நீ இத்தண்ணீரைக் குடிக்கலாம். உன் தம்பிகள் என் பேச்சைக்கேளாமல் தண்ணீர்குடித்தே இந்தத் துன்பத்தையடைந்திருக்கின்றனர். நீயும் அவர்களைப்போலவே ஸாகஸச்செயல் செய்யத்துணியாதே. உன்னிடத்தில் அன்புகூர்ந்து இச்செய்தியை உனக்கு முன்னதாகத் தெரிவித்தேன். இனி உன் இஷ்டம்" என்று ஒரு கொக்கு ஆகாயத்தில் உரத்துக் கூவிற்று. அந்தப் பேச்சுகளைச் செவியுற்றமாத்திரத்திலே தருமபுத்திரன் அப்படியே நின்று விழித்துப்பார்த்து, "ஸ்வாமி, தேவர் கொக்குவடிவம் பூண்டு வந்த மகாதேவனோ? அக்கினிதேவனோ? வாயுதேவனோ? அடியேனுக்குத் தெரிவிக்கவேண்டுகிறேன். சாதாரணமான ஒரு கொக்குக்குக் குலபர்வதங்கள்போல் எதற்கும் சலியாத தைரியசாலிகளான என் தம்பிமார்களை இப்படிவிழச்செய்யத் திறமைகிடைத்திராது; ஆதலின் தேவரீர் இப்பொழுது சொன்ன வார்த்தைகள் அடியேனுக்கு அச்சமும் ஆச்சரியமும் உண்டாக்குகின்றன. இவ்வளவு மகிமையுள்ள மகாபுருஷனாகிய தேவரீர் யாரோ அதை அடியேனுக்குத் தெரிவித்து என் மனக்கவலையைத் தீர்க்கக்கடவீர்" என்று தீனமாய் வேண்டிக்கொள்ள, அதுகேட்டு அந்தக் கொக்கு, பெரிய தலையும், அக்கினியைக் கக்குகின்ற கண்களும், கோரைப்பல்லும் உடைய பயங்கரமான முகத்துடனே பனைமரம்போல நீண்டதேகமுள்ள புருஷவடிவமாய் அவன் எதிரே வந்துநின்று, "நான் கொக்கன்று, ஒரு யக்ஷன். என் வினாக்களுக்கு விடைகொடாமல் எவன்

இந்நீரைத் தொடுகிருனே அவன் எப்படிப்பட்டவனுனுலும் தக்ஷணமே மாண்டுபோவான். பொறுத்தார் பூமியாள்வார் என்றுணர்ந்து நீ எந்தச்செய்தியையும் நிதானித்துக் கேட்கின்ற பொறுமையும் விவேகமும் உடையவனுதலால், அவசரப்படாமல் என் வரலாற்றை விசாரித்தாய். இனி என் வினுக்களுக்கு விடைகொடுக்க வேண்டும்; அப்படிச் செய்வாயாயின் உனக்கு மிக க்ஷேமமுண்டாகும்" என்று சொல்லிற்று. அந்தப் பேச்சைத் தருமபுத்திரன் கேட்டு, "ஓ மகாபுருஷனே! தேவரீரைப்போன்ற பெரியோர் கேட்கும் கேள்விகளுக்கு உசிதமான நல்ல உத்தரம்சொல்ல நான் எவ்வளவு? ஆயினும் என் சிற்றறிவுக்குத் தெரிந்தவண்ணமாயில் சொல்லுகிறேன்" என்று உரைக்க, யக்ஷன் தருமராஜனை நோக்கிப் பற்பல விதமான கேள்விகள் கேட்டனன். அவைகளுக்கெல்லாம் தருமபுத்திரன் தகுந்தபடி சமாதானம் சொல்லிக்கொண்டுவந்தான். அவ்வினுவிடைகளை இங்கே எழுதப்புகுந்தால் மிகவும் வளருமாதலின் அவைகளை மற்றொரு சஞ்சிகையில் எழுதுவோம்.

அப்படித் தான் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தருமபுத்திரன் ஏற்ற சமாதானம் சொன்னதுகேட்டு யக்ஷன் மிகுந்த சந்தோஷமடைந்து தருமராஜனை நோக்கி, நீ உன் தள்ளாமையையோடுகூட நான் வினவின் வினுக்களுக்குச் சரியான விடைகொடுத்தாய்; ஆதலின் எனக்கு உன்னிடத்தில் மிகுந்த சந்தோஷமுண்டாகின்றது. உன் சோதரர்களிடத்தில் உள்ள அபிமானத்தினுலேயே நீ இவ்வளவு பாடுபட்டாயாதலின், இவர்களுள் எவனுவது ஒருவன் பிழைத்து எழுந்திருக்கச் செய்கின்றேன், உனக்கு இஷ்டமானவனைக் குறித்துச் சொல்லென்று கேட்க, தருமன், தருமத்தையே முதன்மையாய் அனுசரித்தவனுதலின் தன் மாற்றுந்தாயான மாத்திரியின் வயிற்றிற் பிறந்தவனுன நகுலன் என்பவனைச் சுட்டி, மகாசூரனுன இச்சிறுவன் பிழைக்கக்கடவனென வேண்டிக்கொண்டனன். அதுகேட்டு யக்ஷன் அவனுடைய கருத்தைத் தெரிந்துகொண்டு, குருகுலமன்னனே, ஆயிரம் மதயானை பலமுடையோனுன பீமசேனனும், பகைவர்களெல்லாம் பயந்தோடும்படியான பராக்கிரமப் பெருமையுடைய அர்ச்சுனனுமாகிய உன் அருமைத்தம்பிமார்கள் உயிரற்று வீழ்ந்துகிடக்க, அவர்களைவிட்டு மாற்றுந்தாயின் மகனுன நகுலன் பிழைக்கட்டுமென்கிருயே! இதென்ன பேதைமையென்றுன். அதற்குத் தருமபுத்திரன், எனக்கு மாற்றுந்தாய் என்ற வேற்றுமையில்லை; தாய்மார்களிருவரும் எனக்குச் சமமானவர்களே. குந்திக்கு நானெருவன் பிழைத்திருக்கிறேன், மாத்திரியின் பேருக்கு ஒருவனுவது பிழைத்திருக்கவேண்டுமல்லவா? ஆதலால் நகுலனே பிழைக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அதுகேட்டு யக்ஷன் மிகவும் மனமுவந்து, உன்னுடைய தருமசிந்தைக்கும் சகோதரர்களிடத்திலுள்ள வாத்சல்யத்திற்கும் நான் மிக்க

மகிழ்ச்சிகொண்டேன்; உன் தம்பிமார்கள் எல்லோரும் பிழைத்தெழுந்திருக்கக்கடவர்கள் என்றான். உடனே பீமன் முதலியோர் நால்வரும் தூங்கியெழுந்தவர்கள்போல் எழுந்தார்கள். அது கண்டு தருமபுத்திரன், மிகவும் அதிசயித்து யக்ஷனைநோக்கி, ஓ மகா புருஷனே, இப்பெருமைகளைப் பார்க்கும்போது தேவரீர் ஒரு சாதாரணமான யக்ஷனென்று எண்ணக்கூடவில்லை; தேவேந்திரன் முதலான தேவகுலத்தாரில் ஒருவரோ? அல்லது அடியேனிடத்தில் அன்புகூர்ந்து அடியேனை அனுக்கிரகிக்கவந்த பிதாவாகிய தருமதேவதைதானோ? அடியேனுக்கு ஒன்றும் தெரியவில்லை; உண்மையான சொரூபத்தை விளங்கச்செய்து அடியேனை அபிமானிக்க வேண்டுகிறேன் என்றனன். அதுகேட்டு அந்தப் புருஷன் தன் இயற்கையான வடிவத்தோடு நின்று, குழந்தாய், நான் உன்னுடைய பிதாவான தருமதேவதைதான்; உன்னைப் பார்த்துவிட்டுப் போம்படியாக இவ்விடத்திற்கு வந்தேன். இப்படி நீ அரணியத்தில் வந்து இடைஞ்சற்படுகையிலும் தருமத்தைக் கைவிடாமல் தைரியமுடையவனாயிருப்பதைக் கண்டு எனக்கு வெகு சந்தோஷமாயிற்று, உனக்கு க்ஷேமமுண்டாகக்கடவது. இன்னும் ஏதாவது வரம்வேண்டியிருந்தால் கேள் கொடுக்கிறேன் என்றான். அதுகேட்டுத் தருமபுத்திரன் மிகவும் சந்தோஷமடைந்து தன் பிதாவை வணங்கி நமஸ்கரித்து, தேவரீர் அடியேனுக்கு வரமளிக்க வந்தவராயின், ஆச்சிரமத்திலுள்ள அந்தணனுக்கு அரணிக்கட்டை காணமற்போனதினால் அவருடைய வைதிககருமங்களுக்குக் கெடுதிவாராமல் காத்தருளவேண்டுமென்று உரைக்கத் தருமதேவன், உன் மனதைச் சோதிக்கும்படி நானே மான்வடிவம் பூண்டுவந்து அந்த அரணிக்கட்டையைத் தூக்கிக்கொண்டுவந்தேனே[illegible]ய மற்றொன்றுமில்லை; இதோ அந்தக் கட்டை; எடுத்துக்கொண்டு போ என்று சொல்லி அதைக் கொடுத்தான்.

இவ்விதமாகத் தருமபுத்திரன் தன் சகோதரர்களைப் பிழைப்பித்து, தம்முடைய வாக்கும் தவறுதபடி பிராமணனுடைய அரணிக்கட்டையும் பெற்று, பின்னும் வேண்டிய பல வரங்களையும் தருமதேவனிடத்தில் பெற்றுக்கொண்டு ஸந்தோஷமாய்த் தம்பிமார்களோடுகூட ஆச்சிரமத்திற்போய்ச் சேர்ந்து அரணிக்கட்டையை அந்தணன் கையிற்கொடுத்துச் சுகமாயிருந்தான்.

சகோதரப்பிரீதி இப்படிப்பட்டதென விளக்கிக்காட்ட இவற்றினும் [illegible]று உதாரணம் வேண்டுமோ? ஆதலால் சகோதரர்கள் மற்ற சிநேகமித்திரர்களைப்போல அல்லவென்றும், அவர்கள் கிடைப்பது அருமையென்றும் எண்ணி, கூடப்பிறந்தவர்களிடத்தில் எல்லோரும் அன்பும் ஆதரவும் உள்ளவர்களாய் எப்படிப்பட்ட காலத்தும் ஒருவரையொருவர் விட்டுப் பிரியாமல் ஒத்து உறவாடி வாழ்ந்துகொண்டிருக்கக்கடவர்கள்.

ஓர் கழுகுக்கூடு.

கழுகானது, பார்வைக்குச் சிறப்புற்றதான பறவையாகவேயிருக்கின்றது; ஆயினும் அறிவுவிஷயத்தில் அது பறவைகட்கு அரசாக இருக்கும் அந்தஸ்துக்குத் தகுதியானதன்று. அது தன் குஞ்சுகளுக்காக அப்போதைக்கப்போது மிக ஊக்கமாய்ச் சண்டையிடத் தக்கவலிமை அமைந்திருக்கின்றதென்பதைவிட, மற்றொரு நற்குணமும் அதினிடத்திலிருக்கிறதாகத் தெரியவரவில்லை. இதற்குத் திருஷ்டாந்தமான கதையொன்றுண்டு.

ஸ்காத்லாந்து தேசத்து மலைநாட்டாரொருவனுடைய நிலக் கொல்லைக்கு அடிக்கடி ஒரு பெருங்கழுகு வந்து, அவனுடைய தாராக்குஞ்சுகளையும், கோழிக்குஞ்சுகளையும் வாரியெடுத்துக்கொண்டுபோவதே தொழிலாயிருந்தது. அதனைப் பழிவாங்கவேண்டுமென்று தீர்மானித்து ஓர்நாள் அவன் கையிற் சிறு துப்பாக்கியோடு வந்து ஒரு துள்ளல் துள்ளிப் பாய்ந்து தனக்கருகிலிருக்கும் பர்வதத்தின் கற்பாறையின்மேல் தாவி ஏறப்போனான்; ஏறும்போது மேலே தலைக்குநேராக அக்கழுகுக் கூட்டைக் கண்டு அதில் பெரிய பறவைகள் இருக்கின்றனவோவெனச் சந்தேகித்து உரத்தகுரலாய் ஆரவாரஞ்செய்துபார்த்தான்; அக்கூட்டில் ஆண்பெண் கழுகுகளிலொன்றேனுமில்லையெனத் தெரியவந்தது. அதன்மேல் அவன் தன் பாதரக்ஷைகளைக் கழற்றிக்கொண்டு கூட்டை நோக்கி ஏறலானான். ஏறுகையில், பாதிவழியிலே அவன் ஓர் பாறையைப்பற்றி, மற்றோர் பாறைப்படையில் நின்றிருக்க, தன் அலகில் ஆகாரங்கவ்வி விரைந்து வரும் ஓர் பெண்கழுகைப் பார்த்தனன். உடனே அக்கழுகு பயங்கரமான பெருங்கூச்சலோடு அவ்விடத்திற் புகுவோனை நோக்கிப் பாய்ந்துவர, அவன் தன்னைக்காக்கத் திறமையற்றவனாகித் தன் கண்கள் கீறுண்டுபோமென அச்சமுற்று அப்பாறையைவிட்டு மிக விசாலமான மற்றோர் கற்பாறையில் மெல்ல இறங்கினன். திரும்பவும் அக்கழுகு அவன்மேற் பாய்ந்து, தன்னை அவன் சுடக்கூடாதவண்ணம் வெகு அருகாமையில் வந்துவிட, அவன் நிராசையாய்த் தன் குல்லாயைக் கழற்றி அதன்மேல் எறிந்தான். எறியவே கீழேவிழுந்துகொண்டிருந்த குல்லாயைக் கண்டு கழுகு சரேலென்று பாறையின் கீழ்வரைக்கும் அதனைத் தொடர்ந்துசென்றது. செல்லவே, அவன் துப்பாக்கியைப் பிரயோகிப்பதற்கு அனுகூலமான தருணம் வாய்த்தது. உடனே அவன் மனந்துணிந்து துப்பாக்கியையெடுத்துப் பிரயோகித்தான். குண்டுசரியாய்ப் பாய்ந்ததனால் அடியுண்டு அக்கழுகு அவனுக்குக் கீழே வெகுதூரத்தில் மரித்து வீழ்ந்தது. அதுகண்டு கொல்லைக்காரன் தன்னுடைய தந்திரம் சபலமாயிற்றென்று சந்தோஷமாய் வீடுபோய்ச் சேர்ந்தான்.

ஆண்மை.

தாம் ஆண்மையுள்ளவர்களாயிருக்கவும் அல்லது ஆண்மையுள்ளவரெனப் பிறரால் மதிக்கப்படவுமே சிறுவர் விசேஷமாக விரும்புகின்றனர். அதைப்பார்க்கிலும் அதிகமான அவா அவர்கட்கு மற்றொன்றிலும் இல்லை. அப்படி அவர்கள் ஆண்மைக்குணமுள்ளவர்களாயிருக்க விரும்புவது மிகவும் நல்லதுதான். ஆயினும், ஒரு கோபுரத்தைப்பற்றி உபந்நியாஸமெழுதப் புகுந்த விளையாட்டுப் புத்தியுள்ள வாலிபன் "பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்காய் முடிந்தது" என்பதுபோலக் கோபுரம் என்னும் பேர்பெற்ற ஓர் பந்தயக்குதிரையின் பிறப்புவரலாறு, உருவமைப்பு, அது பந்தயங்களில் பெற்ற ஜயம் முதலியவைகளை வர்ணித்தெழுதியதுபோல் இவர்களும் ஒன்றுகிடக்க ஒன்றாக நினைத்து நடக்கின்றனர். தான் எழுதப் புகுந்த விஷயம் இன்னதென்பதையே அவன் நன்றாய் அறிந்துகொள்ளவில்லை. பல பிள்ளைகள் தாங்கள் ஆண்மையுள்ளவர்களாயிருக்கவாய்த்த காலத்திலும் அப்படியிருப்பதில்லை. அவர்கட்கு ஆண்மைக்குணம் இப்படிப்பட்டதென்பதும் தெரியாது; அதைப்பெறத் தாம் பாடுபடவேண்டியவழி இன்னதென்பதும் தெரியாது.

அத்தன்மையான பிள்ளைகளுள் ஒருவன் ஆண்மைக்குணமுடையவனாயிருக்கவேண்டுமென்று மிக்க அவாக்கொண்டு, "தான் அதற்காக ஆண்மக்களைப்போலிருக்கவேண்டும்: ஆண்மக்கள் ஒழுங்காய் மீசைவைத்துக்கொண்டு, பொன்சங்கிலி, மூக்கண்ணாடி, சரிகைத்தலைப்பாகை, விதம் விதமான உடை இவைகளைத் தரிக்கின்றனர்; வெகு அழகான பிரம்புகளைக் கையில் பிடித்து அலங்காரமாய்ச் சுழற்றிக்கொண்டு போகின்றனர்; மோதிரங்கள் இட்டுக்கொள்கின்றனர்; புகைச்சுருட்டுப் பிடிக்கின்றனர்; எவர்க்கும் அடங்காமல் சுதந்தரமாய்ப் பேசுகின்றனர். ஆண்மைக்குணமுள்ளவனாயிருக்கவேண்டுமென்றால் நானும் இவ்வண்ணமே நடக்கவேண்டும்" என்று நினைக்கிறான். இவ்வாறு நினைப்பது மிகப் பிசகானது; இவன் பார்த்து மேல்வரிச்சட்டமாகக் கொள்ளத்தக்க நடக்கையும் வெளித்தோற்றமுமுள்ள மனிதர் விசேஷமாய்க் கிடைப்பதரிது. மேற்சொன்னமாதிரி நடக்கையுள்ளவர்களெல்லாம் யோக்கியரான மனிதர்களல்ல. மேலுக்கு அற்பமான உடை உடுத்திக்கொண்டிருப்பவனாயினும், உண்மையாகப் பெருந்தன்மையுள்ளவனாயிருக்கலாம். ஆகையால், பிள்ளைகளே, நீங்கள் ஆண்மையுள்ளவர்களாயிருப்பதற்குச் சுருட்டு மோதிரம் முதலியவை வேண்டுவதில்லை; இவற்றைவிடச் சிறந்ததான மற்றொன்று வேண்டும். ஆண்மையுள்ளவராகவாயினும் இல்லாதவராகவாயினும் ஆவது உங்களிடத்திலுள்ள பொருள்களாலுமன்று; வெளிக்குப் புலப்படுகிற உங்கள் நடையுடை பாவனைகளாலுமன்று; நீங்கள் நிற்கின்ற நெறியினாலும் செய்கின்ற செய்கையாலுமேயாம்.

மற்றொருவகையான பிள்ளை சொல்வதாவது: "நான் ஆண்மையுள்ளவனாயிருக்க விரும்புகிறேன். ஆண்மைக்குணத்தை வேண்டுகிறவன் தைரியசாலியாயிருக்கவேண்டும்; தைரியமே முதன்மையானது. பகைவர்க்கு வசப்படாமலும் பின்வாங்காமலும் இருக்கின்ற போர்வீரனும், பயம் இப்படிப்

பட்டதென்றே அறியாதிருப்பவனும், தன் சொந்தமான சுகலாபங்களைத் துறந்திருப்பவனும், தான் விரும்பியதைக் கைக்கொள்ளுமளவும் காரியத்தில் கண்ணுயிருப்பவனும், சமயம் வந்தபோது எவ்விதமான துன்பத்திற்கும் உயிர்க்கேயாயினும் துணிந்திருப்பவனும், இவர்களுக்கெல்லாம் மேலாய் ஒன்றுக்கும் இணங்காதிருப்பவனும் ஆகிய இவர்களே ஆண்மையுள்ளவர்களாம்; இப்படிப்பட்டவையே ஆண்மைக்குணமாம்" என்று சொல்லுகிறுன். இந்தப் பையனை நாம் கொண்டாடலாம்; ஏனெனில், ஆண்மைக் குணமென்பது இவனிடத்தில் சிறிதுண்டு; முன் சொன்னவனிடத்தில் அது அமைந்திருப்பது சந்தேகமே. இவனும் ஆண்மைக்குணத்தில் ஓர் சிறிதுமாத்திரம் பெற்றிருப்பவனேயன்றி முற்றும் பெற்றவனன்று. தைரியமும் கஷ்டநஷ்டங்களைத் தாங்கும் பொறுமையுமாத்திரமே ஆண்மைக் குணமல்ல; அவை சிறந்தகுணங்களே ஆயினும், அந்தக் குணம் மிருகங்களுக்கும் உண்டு. மேலும் அவை நமது தேகத்தைப்பற்றிய குணங்களேயன்றி மனதைப்பற்றியவையல்ல. மனிதர்களைப்பார்க்கிலும் மிருகங்களிடத்தில் அவை மிகவும் விசேஷமாகக் காணப்படுகின்றன. அதனுல் நாய் முதலிய மிருகங்கள் ஆண்மையுள்ளவையாகுமோ? இரண்டாவது, ஒரு மனிதன் தைரியமுள்ளவனும், வருத்தங்களை மதியாதவனுமாயிருக்கலாம்; அதனேடு கொடியனும் துஷ்டனுமாயுமிருக்கலாம்.

இன்னுமொரு தன்மையுள்ள பிள்ளையுண்டு: அவன் பற்பல வர்ணமான வஸ்திரங்களைத் தரித்து, மல்லயுத்தங்களை மேலாகப் பேசுகிறுன். இதைப் பற்றி அவன் சொல்வதாவது: பந்தயங்களிலும் பலவகை வீரச்செயல்களிலும் வெற்றிபெறுவது ஆண்மைக்குணமாம். இக்குணமுள்ளவனை ஆண் பிள்ளையெனக் கூறுகிறுர்களல்லவா? தைரியமாக வாகனமேறிச் செலுத்துகின்றவனும், குறிதவருத வில்லாளியும், துணிவுள்ள மல்லவீரனும், கைச் சுறுக்கும் கண்கூர்மையும் உள்ளவனும் ஆகிய இவர்கள் ஆண்மையுள்ளவர்கள்—என்றிப்படித் துணிவாய்ப் பேசுகிறுன்.

இரண்டாவன் சிலவிஷயங்களில் முதல்வனை ஒத்திருப்பதுபோலவே மூன்ருவனும் பலவிஷய்ங்களில் அவர்களையொத்திருக்கின்றுன். இவர்களிருவரும் தேகபலத்தையும், சுகதுக்கங்களைத் தாங்கும் திறத்தையும், கஷ்டநஷ்டங்களுக்குச் சலியாத விடாமுயற்சியையும் மேலாகப் பேசுகின்றனர். ஆயினும், இவ்வளவே ஆண்மைக்குரிய குணங்களென நினைப்பார்களாயின், அவர்களும் பிசகினவர்களே. சுறுசுறுப்பான விளையாட்டுக்கள் மிகச் சிறந்தவைதாம்; ஒருவேலையும் செய்யாமலும் அல்லது மிகக் கேடுகெட்டதான ஒன்றைச்செய்துகொண்டும், பள்ளிக்கூடத்தில் ஒருபோதும் விளையாடாமல், மந்தமாய்ச் சோம்பி உட்காந்திருக்கின்ற சிறுவன் ஒன்றுக்கும் உதவான். ஆயினும், பந்தடித்தும் போர்செய்யப் பழகியும் விளையாடாதவர்கள் ஆண்மையுடையவர்களல்லரென்று சில சிறுவர்களும் பெரியோர்களும் சொல்வது மிகப் பிசகானது. அது சரியாயிருக்குமாயின், தேகபலம் இல்லாத எவனும் ஆண்மையுடையவனுயிருக்கலாகாதே. மிகுந்த தைரியசாலியாயிருந்தவர்களும் சிலர் தேகபலமற்றவர்களாயிருந்தனர். அப்படித் தேகபலம்இன்றி மிக்க தைரியசாலியாயிருந்தவன் லார்டு நெல்ஸன் என்னும் மீகாமனும்.

ஆண்மைக்குணத்தில் சேராதவை இவையென்பதை நாம் இப்போது அறிந்துகொண்டிருக்கிறோம்; அதிற் சேர்ந்தவை எவையென்றுலோ, தைரிய

மும் அதனேடுகூடக் கோபதாபங்களை அடக்கிக்கொள்ளும் குணமும், செய்கடனிற் கருத்தும் ஆகிய இவைகளாம். தான் பேர்பெறவேண்டுமென்பதற்காகவே ஒருவன் ஒரு நற்செய்கை செய்வானுயின், அச்செய்கையின் பெருமை அத்தனையும் தன்னயம்பாராட்டுகின்ற ஒரு துர்க்குணத்தால் அழிக்கப்படுகின்றது. அவ்வாறு தன்னைப்பற்றி நினையாமல் அது தன் கடமையென்றெண்ணிச் செய்பவனிடத்திலேதான் ஆண்மைக்குணம் அமைந்திருக்கின்றது. ஆண்மைக்குணம் நம்மிடத்தில் பரிபூர்ணமாய் அமைந்திருக்கவேண்டுமென விரும்புவோமாயின், தைரியமும் உண்மையும் உடையவர்களாயிருப்பதோடுகூட, அடக்கமும், வணக்கமும், மனத்தூய்மையும் உள்ளவராயிருக்கவேண்டும். கடைமொழியாக ஒன்று சொல்லுகிறோம்.—சாந்தகுணம், ஜீவகாருணியம், தைரியம், வலிமை, நீதி, விவேகம், உண்மை இக்குணங்களில்லாத எவனும் எப்பொழுதும் இதுவரையில் பெருமைபெற்று வாழ்ந்ததில்லை.

ருதுவர்ணனை—கிரீஷ்மருது

(தொடர்ச்சி.).

வேடர்தலைவனுடைய மக்கள் தமது சிற்றம்மை வீடான திருப்பதிபோய்ச் சேர்ந்து அவ்விடத்தில் பற்பலவிதமாக விளையாடிக் களித்திருந்தார்களென்று முன் சொன்னேமல்லவா? அந்த விளையாட்டுக்களால் அவர்கட்குத் தாய்தந்தையர்களைவிட்டுப் பிரிந்தோமென்ற நினைவு சிறிதுமுண்டாகவில்லை. ரங்கசாமி நாள்தோறும் ராமசுவாமியோடுகூடி விளையாடுவதும் காலைமாலை வேளைகளில் சிற்றப்பனேடுகூடக் குதிரைசவாரிசெய்வதுமாய் மனமகிழ்ந்திருந்தான்.

இப்படியிருக்க ஒருநாள் அந்தச் சிறுவர்கள் இருவரும் குதிரைசவாரிசெய்யும்பொழுது இருப்புப்பாதை வண்டியோடும் இடத்திற்கு வேடிக்கை பார்க்கப்போனார்கள். அங்கே அவர்களுடன் சென்ற நாய் தன் வழக்கப்படி புகைவண்டியோடுகூடச் சிறிதுதூரம் ஓடி வண்டிக்குமுன்னே தான் போகவேண்டுமென்று இருப்புப்பாதையோரமே ஓடக்கருதி வேலிக்குள் புகுந்து ஓட ஆரம்பித்தது. அதுகண்டு இருப்புப்பாதைக் காவற்காரன் பொறுமல் அதைப் பிடித்து வேலிக்கு வெளியே வீசியெறிந்தான். அது வீழ்ந்த விடம் கல்லும் முள்ளும் அடர்ந்த காட்டோரமானுலும் செடிகள் முளைத்து மெத்தென்று இருந்ததனுல் அதற்குப் பிராணபாயமான அடி படவில்லை; ஆயினும் அது விழுந்தவேகத்தில் மெய்மறந்து மூர்ச்சைபோயிற்று. அதுகண்டு அச்சிறுவர்கள் விசனமடைந்து அந்தக் காவற்காரர்களை வெறுத்துக் குதிரையினின்றும் இறங்கித் தமது நாய் வீழ்ந்துகிடந்தவிடத்திற்சென்று அதை மெல்லத் தட்டித் தடவிக்கொடுத்துப் பல சீதோபசாரங்கள் செய்தனர். அதனுல் அது கொஞ்சம் களைதெளிந்து மெல்லக் கண்விழித்துப்

பார்த்தது. அதுகண்டு அவர்கள் இனிப் பயமில்லையென்று மனந் தேறி அதை எடுத்துக் குதிரைமேல் வைத்துக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தனர். பிறகு அந்த நாய் நாளுக்குநாள் தேறிச் சுகமடைந்த தென்றாலும் முன்னிருந்த உற்சாகம் அதற்கு மறுபடி உண்டாகவே யில்லை; குதிரையைப் பின்தொடர்ந்து ஓட சக்தியும் உண்டாக வில்லை.

இப்படியிருக்கையில் சென்னையிலே படித்துக்கொண்டிருந்த கோபாலன் கோவிந்தனென்ற இரண்டு பிள்ளைகளும் அவ்விடம் வந்துசேர்ந்தனர்கள். அவர்கள் அங்கிருந்து வாங்கிவந்த பல வகைப்பழங்களையும் பணியாரங்களையும் யாவர்க்கும் சமபாகமாகப் பகிர்ந்துகொடுக்க, அதைப் புசித்து எல்லோரும் களிப்படைந்து இருந்தனர்கள். அதன்பிறகு அவர்கள் முன்போல விளையாடுவ தைவிட்டு அங்குள்ள பெரிய பருவதங்களிலேறி அவ்விடத்து விநோதங்களைப் பார்த்துக்கொண்டுவந்தார்கள். அப்போது ஒரு நாள் ஒரு கணவாயில் ஏறியும் இறங்கியும் விளையாடிக்கொண்டிருக் கையில் அங்கே ஒரு பெரிய விருக்ஷத்தின் நுனிக்கிளையிலே கட்டி யிருந்த குருவிக்கூண்டைக் கண்ணுற்று அதிலுள்ள குஞ்சுகளை வெளியிலெடுத்துப் பார்க்கவேண்டுமென விரும்பி அவர்களுள் பெரிய பையனான கோபாலன் மற்றவர்கள் கீழே தாங்கிநிற்க அவர்களின் மேலேறி அக்கிளையைத் தாவி அதிலுள்ள கூண்டைக் கைக்கொள்ளப் பார்த்தான்; சாத்தியப்படாமல் மெல்ல இறங்கி வந்துவிட்டான். ..அம்முயற்சியினால் தனக்கு ஒருவிதமான நன் மையும் கிடைக்காமற்போனபோதிலும், கைகால் சிறிது பிசகியி ருக்குமாயின் பிராணாந்தமான அபாயம் நேரிட்டிருக்குமல்லவா? உலகத்தில் சிறுவர்கள் தமக்குத் தகாத இப்படிப்பட்ட ஸாகஸமான செயல்களைச் செய்ய முயல்வார்கள். அப்படிச் செய்வது சரியான தல்ல. அவ்விதமாய் எவ்வளவோ பாடுபட்டும் பிரயோசனப்படா மல் மரத்தினின்றும் இறங்கிவந்த கோபாலன், மறுபடியும் மற்றப் பிள்ளைகளோடுகூட அம்மலைமுழுதும் சுற்றித் திரிந்து திரிந்து அங்குள்ள பலவகைப் பறவைக்கூண்டுகளையும் கலைத்துக் கடைசி யில் ஒரு கிளிக்குஞ்சை பிடித்துக்கொண்டு திரும்பினான். திரும் பிவருகையில் வழியிலே ஒரு விநோதத்தைக் கண்டு கோபாலன் தன் சகோதரர்களுடன் அடியில்வருமாறு சொல்லலாயினான்.

தம்பிமார்களே, அதோ அந்தப் பெரிய மரத்தைப்பார்த்தீர்களா! அம்மரத்து நுனிக்கிளைகள் அதன்கீழுள்ள கிணற்றுக்கு நேராக வளைந்திருக்கின்றன. அந்நுனிக்கிளையில் ஓர் பறவை கூடுகட்டிக் கொண்டு இருக்கின்றது. எப்படிப்பட்டவனாயினும் அக்கிளையி லேறிக் கூண்டைப் பிடிக்க முடியாது. யாராவது ஒருவன் அக்கிளை யைத் தாழ்த்திவிடும்போதெல்லாம் அந்தக் கூண்டு ஊசல்போல் ஆடுகின்றது. அதுகண்டு கூட்டினுள் இருக்கின்ற சிறகுமுளைத்

ததும் முளையாததுமான சிறுகுஞ்சுகள் பயந்து கீச்சு கீச்சு என்று கூவ, தாய்ப்பறவையானது அவற்றின் பயத்தைத் தணித்து மெல்ல மெல்லப் பக்கத்துக் கிளைகளுக்குத் தாவிப் பறக்கக் கற்றுக்கொடுக்கின்றது; இலைச்சந்துகளில் ஊர்ந்துவருகிற சிறுபூச்சிகளைப் பிடித்துப் புசிக்கக் கொடுக்கின்றது பார்த்தீர்களா என்றான். அது கேட்டு இராமசாமி, பறவைகளெல்லாம் முதலில் முட்டையிட்டுத் தானே குஞ்சுபொரிக்கின்றன. எல்லா முட்டைகளும் எல்லாக் குஞ்சுகளும் ஒரேவிதமாகவே இருக்குமா, அல்லது ஒன்றுக்கொன்று பேதப்பட்டிருக்குமா என்று வினவ: கோபாலன், தம்பி முட்டை உயிரில்லாதது, குஞ்சு உயிருள்ளது. அதோ அந்தப் பறவையானது சிவப்புப்புள்ளிகளோடுகூடிய வெண்மைநிறமான முட்டை இடும். அம்முட்டை கோலிகுண்டுபோல் இருக்கும். முட்டையிட்ட உடனே பறவை அவைகளைப் பத்திரமாய் அவயங்காத்துக் குஞ்சு பொரிக்கின்றது. அக்குஞ்சுகளுக்குச் சிறகு முளைக்குமளவும் தாய்ப்பறவை இரைதேடிக்கொடுத்து வளர்த்துவரும், சிறகுமுளைத்துப் பறக்கத் திறமையுண்டானஉடனே அக்குஞ்சுகள் தாயைப் போலப் பறக்க ஆரம்பித்துத் தமக்குவேண்டிய இரைகளைத் தேடிக் கொள்ளும். அதோ பார், மற்றொரு பறவை தான் கூடுகட்டிக் கொண்டிருந்த மரம் ஒருவேளை மேல்காற்றில் வீழ்ந்துபோய் அதனால் தனக்கு ஏதாவது அபாயம் நேரிடுமோ எனப் பயந்து இதோ இந்த ஈச்சஞ்செடியில் கூடுகட்டிக்கொள்ளுகிறது என்று இப்படி தான் வழியிற்காணும் விநோதங்களையெல்லாம் ஒவ்வொன்றாக அவர்களுக்குக் காட்டிச் சொல்லிக்கொண்டு நடுப்பகல்வேளையில் வீடுபோய்ச் சேர்ந்தான்.

மறுநாள் சந்திரகிரியையும் அதன்மேல் கட்டப்பட்டிருக்கின்ற கோட்டையையும் பார்த்துவரவேண்டுமெனக் கருதித் தாய்தந்தையர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு விளையாட்டுப் பிள்ளைகளான மரகதம், மோகனம் இவர்களையும் கூட்டிக்கொண்டு தங்களுடைய நாய்களுடன் காலையில் வீடுவிட்டுப் புறப்பட்டு உதயமாய் இரண்டு மூன்று நாழிகைக்குள்ளேயே அம்மலையடிவாரம் போய்ச் சேர்ந்தனர். அங்கே கோபாலன் தன் தம்பிமார்களைப் பார்த்து நம்முடைய தங்கைகள் ஒருநாளும் இப்படிப்பட்ட மலைகளில் ஏறியறியார்கள்; பத்திரமாய்க் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு வாருங்கள் என்றான். அவர்களும் அப்படியே பத்திரமாய் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு மலையேறிப்போனார்கள். போகையில், சுற்றுப்புறங்களிலுள்ள மலைகளும், அம்மலைகளுக்கு இடையிலுள்ள கணவாய்களும், அக்கணவாய்களிலுள்ள தோப்புகளும், அத்தோப்புகளிலுள்ள விருக்ஷங்களும், அந்த விருக்ஷங்களிலுள்ள பழக்குலைகளும், கண்ணுக்கு விநோதமும் மனதுக்குக் களிப்பும் உண்டாக்கிக்கொண்டிருந்தன. அவ்வழியே, வெண்ணி

றமான மலர்களால் நிறைந்து வெளேலென விளங்குகின்ற மலை மல்லிகைப் புதர்களையும், தெள்ளியநீர்கள் களகளவென்று இலாந்து வீழ்கின்ற மலையருவிகளையும், விசாலமாய்ப் பரந்து மழமழவென் றிருக்கும் பெரிய பாறுங்கற்களையும், பீரங்கிகுண்டுகள்போலக் குண்டுகுண்டாய்க் கிடக்கின்ற பெரிய கூழாங்கற்களையும் பார்த்துக் கொண்டு சிறிதுதூரஞ்சென்றனர். நடுவழியில் இருபுறங்களிலும் சுவரெழுப்பியதுபோல வாட்டமாய் எழும்பியிருக்கின்ற மலைக ளும், மற்ற இருபுறங்களிலும் வெளியாகி இறங்குவதற்கு அனு கூலமான படிகளுமுள்ள ஒரு பெரிய பொய்கையைக் கண்ணுற்று, அந்தப் படிக்கட்டின் இருபுறங்களிலும் மாஞ்செடி, புளியஞ்செடி, ஆலஞ்செடி முதலியவைகள் அடர்ந்திருக்க அதன் வழியாய் இறங்கி அம்மரத்து நிழலிலே போய் உட்காந்தார்கள். அப்பொழுது சங்கசாமியும் அவன் சகோதரிகளும், அண்ணன்மார்களே, நாங்கள் ஒருநாளும் இப்படிப்பட்ட அழகான தடாகத்தைக் கண்டறியோம்; இதில் சுகமாய் நீராடிக் களைதீரத் தண்ணீர் குடித்துப் பிறகுதான் அப்புறம் போகவேண்டுமென்றனர். அதுகேட்டுக் கோபாலன் அப் படியே ஆகட்டுமென்று தன் தம்பிமார்களைத் துணையாகக் கூட்டிக் கொண்டு, அதனோரத்தில் வீழ்ந்துகிடந்த சில கட்டைகளையெடுத்து அவற்றை மெல்லத் தடாகத்தில் தள்ளித் தெப்பமாகக் கட்டி, மேலே மூங்கிற்கழிகளைக் கொண்டுவந்து வண்டிக்கூடுபோல வளைத்துக் கட்டி அதின்மேல் வெயிலுறைக்காதபடி பச்சிலைகளைப் பரப்பி நெருக்கமாய்க் கட்டி, இது ஒரு தெப்பம்; இதின்மேல் ஏறிக்கொண்டு இந்தக் குளத்தில் தெப்பலாடுவோம் வாருங்கள் என்று யாவரையும் அதன்மேல் ஏற்றி, தாங்கள் போர்த்துக்கொண்டிருந்த துப்பட்டிக ளைப் படவுக்குப் பாய்கட்டுவதுபோலக் கட்டித் தெப்பலை ஓட்டினார் கள். அதனால் அவர்களுக்கு அப்போது உண்டான ஆநந்தத்தை என்னென்று சொல்லலாம்! தங்கள் நாயுடன்கூட யாவரும் அதில் ஏறிக்கொண்டு அடிக்கடி நாயைத் தண்ணீரில் தள்ளி, அது நீந்தி நீந்திவந்து தெப்பத்தின் மேலேறும்போதெல்லாம் கைகொட்டி நகை த்து, இவ்விதமாய்ப் பல வேடிக்கைசெய்துகொண்டு இரண்டுயாம காலம் தண்ணீரில் விளையாடி எதிர்க்கரைக்குப் போய்த் தெப்பலி னின்றும் இறங்கினார்கள். இவர்களைக் கண்டு அங்கே தவஞ்செய் துகொண்டிருந்த ஸந்நியாசியும் அவருடைய பணிவிடைக்கார னும், மனிதசஞ்சாரமில்லாத இப்படிப்பட்டவிடத்தில் சிறுபிள்ளை களான நீங்கள் வரக்கூடுமா? துரிதமாய் ஊர்போய்ச் சேருங்கள் என்று அவர்களுக்கு அச்சந்தோன்றும்படி சில வார்த்தைகள் சொல்ல, அதற்கு அப்பிள்ளைகள், தெரியாமல் வந்துவிட்டோம், இதோ போய்விடுகிறோம் என்று சொல்லி அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு தாங்கள் வீட்டினின்று கொண்டுவந்த கட்டுச் சோற்றைப் புசித்து, கொஞ்சம் பொழுதுசாய்ந்து குளிர்ந்தகாற்று

வீசத் துவக்கினவுடனே, அங்கிருந்து முன்போலவே தெப்பலேறி இக்கரைக்கு வராமல், அப்படியே மலைமீதேறி வீட்டுக்குத் திரும்ப லானார்கள்.

அப்பொழுது அத்தன்மையான வழிகளை ஒருநாளும் கண்ணால் பார்த்துமறியாத ரங்கசாமியின் சகோதரிகள் மலையினுச்சிக்கு ஏறினபின்பு அங்கிருந்து கீழே குனிந்துபார்த்து திகிற்பட்டு, நாங்கள் இவ்வழியில் ஏறிவரமாட்டோம்; இங்கிருந்து கால்சறுக்கினால் பாதாளத்திலுள்ள அந்தக் கானாற்றில் வீழ்ந்து உருக்காணாமல் போக வேண்டுவதுதானே என்று அங்கேயே திடீரென்று உட்கார்ந்து கொண்டு எழுந்து ஓரடிகூட வைக்கமாட்டோமென்றார்கள். அது கண்டு கோபாலன் சிறுபெண்ணான மரகதத்தை எடுத்துக்கொண்டு மோகனத்தைக் கைபிடித்து மெல்லமெல்ல அழைத்துக்கொண்டுபோனான். அப்படிப் போகும்போதும் மிகவும் சாய்வான ஓரங்களில் அடியெடுத்துவைக்கத் தைரியமில்லாமல் மரகதம் அப்படியே சோர்ந்துபோனாள். அதுகண்டு அவ்விதமானவிடங்களில் நடந்து வழக்கப்பட்ட சிறுவர்கள் இரண்டுபேரும் இரண்டுபக்கத்தில் அவளைக் கைகொடுத்துப் பத்திரமாய்ப் பிடித்து அழைத்துக்கொண்டு போய்ச் சமமான பூமியில் சேர்த்தார்கள். அங்கிருந்து எல்லாரும் ஒன்றாய்ப் புறப்பட்டு அம்மலையின்மீதுள்ள கோட்டையின் விநோதங்களைப் பார்க்கும்படி அவ்விடத்துக்குப் போனார்கள்.

(இன்னும் வரும்.)

மனிதர்களில் ஏற்றத்தாழ்ச்சி எப்படி?

ஒருவிதமாய்ப் பார்த்தால், இம்மாநிலத்து மாணிடர் அனைவரும் ஒருதன்மையானவர்களேயாம். ஏனெனில் உயிர்வாழ்க்கை, சுதந்தரம், தருமம், நியாயம், அவரவர் பொருளை அவரவர் அநுபவித்தல், அரசனுடைய ஸம்ரக்ஷணைக்கு ஆளாயிருத்தல் ஆகிய இவைகட்கு யாவரும் பாத்தியஸ்தர்களேயாம்; ஆயினும் மனிதரெல்லாரும் ஏற்றத்தாழ்ச்சி உடையவராகவேயிருக்கின்றனர். எவ்வாறெனின், இயற்கையிலேயே அவர்கள் வெவ்வேறளவான குணங்களும் யோக்கியதைகளும் உள்ளவராகப் பிறக்கிறார்கள். சிலர் வலிமையுடையவர்கள், சிலர் வலிமையற்றவர்கள்; சிலர் மிகத் தெளிவான நுட்பபுத்தியுடையவர்கள், சிலர் தாமஸகுணமும் மந்தபுத்தியுமுடையவர்கள்; சிலர் உள்ளம் உடம்பு ஆகிய இரண்டும் நோயற்றுச் சுகித்து எல்லா நற்குணங்களும் நிறையப் பெற்றிருப்பவர்கள், சிலர் பிணிகளால் நலிந்து உள்ளம் உடம்பு இரண்டும் பலவீனப்பட்டிருப்பவர்கள். இத்தன்மையான ஏற்றத்தாழ்ச்சி உள்ளவர்களாகவே நாம் இவ்வுலகில் வந்து பிறக்கிறோம்.

அன்றியும் சிலர் நாணயமும், பொறுமையும், தாளாண்மையும், மனவுறுதியுமுள்ளவர்கள்; சிலர் சோம்பல், பொய் புரட்டு முதலிய தீக்குணங்க

ளுள்ளவர்கள். அவர்கட்குத் தீயவழிதவிர மற்றெதிலும் விடாமுயற்சி கிடையாது. இந்த வேறுபாடுகளெல்லாம் இயற்கையான துஷ்டசுபாவம், கெட்ட படிப்பு, அல்லது அறியாமை இவைகளால் உண்டாவனவாம்.

இவ்விதமான ஏற்றத்தாழ்ச்சி உண்டாவதற்குத் திருஷ்டாந்தம்: — இயற்கையில் சமமான நிலையிலுள்ள இருவர் உலகவியாபாரத்தில் பிரவேசிக்கின்றனர். ஒருவன் கல்விகற்றவனாயும், மற்றவன் கல்லாதவனாயுமிருந்தால் அவர்களுடைய நிலைமை சீக்கிரமே பேதப்பட்டுப்போகும். மற்றவர்களெல்லாம் மூடர்களாயிருக்க ஒருவனுக்கு விசேஷமான கல்வியறிவுமாத்திரம் இருக்குமாயின், அவனே மற்றவர்களை அடக்கியாளும் திறமையுடையனாகிறான்.

யோசிக்குமளவில், விடாமுயற்சியென்னும் நற்குணமே மனிதர்க்குள் விசேஷமாய் ஏற்றத்தாழ்ச்சி உண்டாகுவதற்குக் காரணமாயிருக்கின்றது. "அனைவரும் இன்று இராத்திரி ஒரேகாலத்தில் படுத்தாலும் சிலர் விடியனேரத்திலேயே எழுகின்றனர்; மற்றவர்கள் காலைப்பொழுதைத் தூக்கத்தில் கழிக்கின்றனர். ஆதலால் நாளை நடுப்பகல்வேளைக்குள் அவர்கள் வேலையில் முன்னும் பின்னுமாய்விடுவார்கள்" என்று ஒருவர் உரைத்தது இவ்விஷயத்தில் உண்மையாகவேயிருக்கின்றது.

சுபாவத்திலேயே அமைகின்ற இவ்வகைப்பட்ட காரியங்களே சற்று நாகரிகம்பெற்ற தேசமெங்கும் ஏற்பட்டிருக்கின்ற மேல்வகுப்பு கீழ்வகுப்பு, உயர்ந்தபதவி தாழ்ந்தபதவி என்னும் பேதங்களுக்கு ஆதிகாரணமாம். நாகரிகம் பெறாத மிருகத்தன்மையானவர்களிலேகூடப் புத்தியிற்சிறந்த சிலர் மற்றவர்களைப்பார்க்கிலும் உயர்வுபெற்று அவர்களை அடக்கி ஆள்கின்றனர்.

சிறுவர்க்கான கதை.

(விசிரி ராஜன்.)

முற்காலத்திலே மகததேசத்தில் அதிவீரனென்றொரு மன்னவன் இருந்தான். அவனுக்கு ஏழு பெண்கள். ஒருநாள் அவன் அப்பெண்களையெல்லாம் தன்னிடம் வரவழைத்து, குழந்தைகாள் உங்களுக்கு நாள்தோறும் உணவு அளிப்பவர் யார்? எவருடைய கட்டளையினால் நீங்கள் தினம்தினம் புசித்துவருகிறீர்கள் என்று கேட்டான். அதற்குக் கடைசிப்பெண் ஒருத்தி தவிர மற்ற ஆறு பெண்களும் அவரவர் புத்திக்குத் தோன்றியபடி உங்கள் அனுக்கிரகத்தினாலேயே பசியாமல் புசித்துக்கொண்டு சுகமாயிருக்கிறோமென்று பதில் உரைத்தார்கள். கடைக்குட்டியான ஏழாவது பெண் மாத்திரம் அப்படிச் சொல்லவில்லை; ஐயா எனக்கு உணவு அளிப்பவர் கடவுள்; மரம் வைத்தவன் தண்ணீர்வார்க்கிறான் என்பதை நீங்கள் கேட்டதில்லையா? அவ்வுணவை நான் எடுத்துப் புசிக்க

யார் அனுமதிவேண்டும்; எனக்கு மனம்வந்தபோது புசிக்கிறேன் என்று சொன்னாள். அதைக் கேட்கத் தாய் தந்தையர்களுக்கு அப்பெண்ணிடத்தில் மிகுந்த கோபம் உண்டாயிற்று. அதனால் அவர்கள் இனி நாம் ஒரு நிமிஷம்கூட இந்தப்பொல்லாத சிறுக்கியை நம்மிடம் வைத்திருக்கலாகாது; இவள் அன்னமிட்ட வீட்டில் கன்னமிடும் இயற்கையுடையவள் என்று சொல்லி உடனே சில சேவகர்களை அழைத்து, சிவிகை ஒன்று சித்தம்செய்து அதில் எமது கடைசிமகளை ஏற்றிக்கொண்டுபோய் நடுக்காட்டில் விட்டுவிட்டு வாருங்கள் என்று கட்டளையிட்டனர்.

அதுகேட்டுச் சேவகர்கள் அவ்விதமாகவே சிவிகை சித்தம் செய்து அதில் அரசனுடைய கடைசிமகளை ஏற்றிக்கொண்டு அவளுக்குத் தெரியாமலே காட்டிற்குப் போய்விட்டார்கள். எப்புறத்திலும் அடியெடுத்துவைக்க வழியில்லாத மரம் செடிகளடர்ந்த பயங்கரமான ஒரு காட்டு மத்தியிலே பல்லக்கையிறக்கிவிட்டுப் பல்லக்குக்காரர்கள், தாங்கள் அண்டையிலுள்ள குளத்திற்குப் போய்த் தண்ணீர் குடித்துவிட்டு வருவதாகச் சொன்னார்கள். அதுகேட்டு அவ்வரசன் மகள், என்னிடத்தில் நீங்கள் ஏன் பொய்ப்பேச்சு பேசிப்போகிறீர்கள், தந்தையிட்ட கட்டளைப்படியே என்னைக் காட்டில்கொண்டு விட்டாயிற்று; சுகமாய் இனி ஊர்போய்ச் சேருங்கள் என்றாள். அவர்களும் அப்படியே அரசன் கட்டளையை மறுக்கமாட்டாமல் அவளை அங்கேயே தனியாக விட்டு விசனமடைந்தவர்களாய் மெல்ல மெல்ல மறைந்துபோனார்கள்.

பிறகு அச்சிறுமகள் நிர்மானுஷியமான அந்தக் காட்டிலே பேச்சுத்துணைகூட எவரும் இல்லாமல் தனித்திருந்தாளாயினும் சிறிதும் பயப்படாமல் சுவாமியை தியானம்பண்ணிக்கொண்டு, பல்லக்கினுள் படுத்துத் தூங்கிப்போயினாள். சிறிதுநேரம் கழித்து அவள் தூக்கம் தெளிந்து கண் விழித்துப்பார்த்தபோது பொழுதுபோகிற தருணமாயிருந்தது. சிவிகையினுள் ஒரு பாத்திரத்தில் அவளுக்கு வேண்டிய மதுரமான போசனமும், மற்றொரு பாத்திரத்தில் தண்ணீரும் வைக்கப்பட்டிருந்தன. அக்காட்டிலே அநாதையான அச்சிறுமிக்கு அவ்வுணவு அளிப்பவர் யார்? 'அகதிக்கு ஆகாயமே துணை' என்றபடி கல்லுக்குள் தேரைக்கும் முட்டைக்குள் குஞ்சுக்கும் கருவுக்குள் குழந்தைக்கும் உணவு அளித்துக் காக்கின்றதயாநிதியான கடவுள் அனுக்கிரகத்தினாலேயே அவை தனக்குக் கிடைத்தன; கடவுள் தன்னை ஒருபோதும் கைவிடார் என்று அச்சிறுமிமகிழ்ச்சிகொண்டு கடவுளைத் துதித்துச் சிவிகையைவிட்டு எழுந்து வெளியே வந்து நீராடித் தேவபூசைசெய்து அவ்வுணவைப் புசித்தாள். இதற்குள் இருண்டு இராத்திரியாகிவிட்டது; அவள் சுவாமியையே தியானித்துக்கொண்டு பல்லக்கினுள் போய்ப் படுத்துத் தூங்கிப்போயினாள்.

இச்சிறுமகள் எப்போதும் மனத்தூய்மை பூததயை பச்சாத்தாபம் முதலிய பல நற்குணங்களையுடையவளாதலின், தெய்வானுக்கிரகமும் அவளிடத்தில் விசேஷமாய் இருந்தது. அதனால் சுவாமி அவளுடைய கஷ்டதசையைப் பார்த்து மனமிரங்கி அவள் தூங்கி எழுவதற்குமுன்னமே அவ்விடத்தில் அவளுக்காக அற்புதமான மாளிகை ஒன்று நிர்மித்து, அதைச் சுற்றிலும் விநோதமான ஒரு சிங்காரத்தோட்டமும் அதன் மத்தியில் விசித்திரமான ஒரு பொய்கையும் அமைத்துவைத்தார். மறுநாள் காலையில் அரசன் மகள் கண்விழித்தெழுந்து வெளியே வந்து பார்த்தபோது முதனாள் பெருங்காடாயிருந்த இடமெல்லாம் ஒரு அரசனுடைய உத்தியானவனம்போல் இருந்தது. அதுகண்டு அவள் மிகவும் ஆச்சரியமடைந்து, நாம் நேற்றிராத்திரி படுக்கும்போது இவ்விடம் எவரும் அண்டக்கூடாத பயங்கரமான காடாயிருந்ததே, இதென்ன மாயை! இப்பொழுது அற்புதமான ராஜமாளிகையாயிருக்கின்றதே! இவ்விடத்தை நான் இதுவரையில் ஒருநாளும் கண்டதில்லையே என்று வியப்படைந்து நிற்க, அங்கிருந்த சேவகர்கள் எதிர்கொண்டு ஓடிவந்து அந்த ராஜகுமாரத்தியைத் தண்டனிட்டு அவளை அங்கிருந்த மாளிகைக்குள் அழைத்துக்கொண்டுபோனார்கள். அம்மாளிகையானது தன் தகப்பனுருடைய அரண்மனையைப்பார்க்கிலும் பதின்மடங்கு பெருமைபெற்றிருக்கக்கண்டு நமக்காகவே கடவுள் இதை அளித்திருக்கிறார் என்று ஊகித்தறிந்து அவள் மிகவும் மகிழ்ச்சிகொண்டாள். பணிவிடைக்காரர்கள் பல்லாயிரம்பேர் வந்து அவள் காலால் இட்ட வேலையைத் தலையால் செய்யக் காத்திருந்தார்கள். அன்றுமுதல் அவ்விளவரசி அவ்விடத்திலேயே சிலநாள் சுகமாக வசித்துக்கொண்டிருந்தாள்.

சிலநாளைக்குப்பிறகு இவ்விளவரசியின் தந்தையான அதிவீரராஜன், தன் மகளைக் கொண்டுவிட்ட காட்டிலே திடீரென்று ஒரு உத்தியான வனமும் அதன் மத்தியில் அற்புதமான ஒரு மாளிகையும் தோன்ற, அதில் தன் மகள் சுகமாக வசித்துக்கொண்டிருக்கிறாள் என்று கேள்விப்பட்டு வியப்படைந்து, ஆம், அப்பொழுது நம்முடைய மகள் சொன்னதெல்லாம் உண்மையே, நமக்கு எல்லாவற்றையும் அளிப்பவர் சுவாமி ஒருவரே; அவருடைய அனுக்கிரகத்தினாலேதான் இப்பொழுது அவள் அளவற்ற ஐசுவரியம் பெற்று அளகாபுரிபோல வாழ்ந்துகொண்டிருக்கிறாள் என்று தெரிந்து, முன் தான் அவள் சொன்னதைக் கேட்டுக் கோபித்து அவளை அடித்துத் துரத்தியதெல்லாம் தன் அறியாமையேயென்று உணர்ந்து விசனமடைந்தான்; ஆயினும் அம்மகளைப் பார்ப்பதற்கு மறுபடி ஒருநாளும் அவன் அவ்விடத்துக்குப் போகவில்லை.

இவ்வாறிருக்கையில். ஒருநாள் அதிவீரராஜன் தேசாந்தரத்துக்குப் போய்வரவேண்டுமென்க் கருதி, அவ்விடத்துக்குத் தரைவழி

யாய்ப் போவதைவிடக் கடல்மார்க்கமாய்ப் போவது உசிதமான தென்த் தெரிந்து அதற்கேற்றதாய்ப் புதிதாகக் கப்பலும் ஒன்று சித்தம்செய்யத் திட்டம்பண்ணினான். பயணப்படும்போது அவன் தன் பெண்களையழைத்து, என் செல்வச் சிறுமிகளே, நான் தேசாந்தரம் போய்வருகிறேன், அவ்விடங்களில் அதிசயமாய் ஏதாவது இருந்தால் அதை உங்களுக்கு வாங்கிக்கொண்டுவர யோசித்திருக்கிறேன், யார் யார்க்கு என்னென்னவேண்டும் சொல்லுங்கள் என்று கேட்டான். அதற்கு அப்பெண்களில் சிலர் தங்கள் கழுத்துக்குச் சிறந்த மணிமாலை வேண்டுமென்றனர்; வேறுசிலர் வைரக்கற்களிழைத்த விதம்விதமான காதணிகள் வேண்டுமென்றனர்; பின்னும் சிலர் தமக்குப் பலவகைச் சித்திரப்பூம்பட்டாடைகள் வேண்டுமென்றனர். இவர்களெல்லாம் இவ்வாறு சொன்னதைக் கேட்டு அரசன் தன் சின்னமகளை நினைத்துக்கொண்டு, இவர்களெல்லாம் தந்தமக்கு வேண்டியது இன்னதென்று சொன்னார்களே, அச்சிறுமிக்கு என்னவேண்டுமோ அதையும் தெரிந்துகொண்டு போவது நலம். ஆதலின் அவளிடம் ஆளனுப்பி அவள் கருத்தை அறியவேண்டும் என்று எண்ணி ஒரு தூதனை அழைத்து, தமது சிறியமகளிருக்கும் காட்டுக்குப் போய், உன் தகப்பனார் தூரதேசம் போகக் கருதியிருக்கிறார்; அங்கிருந்து அதிசயமான பொருள் ஏதாவது ஒன்று உனக்கு வாங்கிவரவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்; உனக்கு வேண்டுவதென்ன என்று கேட்டுக்கொண்டு வரும்படி சொல்லி அவனை அவ்விடம் அனுப்பினான்.

அவ்வண்ணமே அந்தத் தூதன் இளவரசி வசித்துக்கொண்டிருக்கும் காட்டுமாளிகைக்குச் சென்றான். இவன் போனபோது அங்கே அவ்விளவரசி தேவபூசை செய்துகொண்டிருந்தாள். அத்தருணத்தில் தூதன் அரசன் சொன்ன செய்தியை அவளிடம் அறிவிக்க, அப்பொழுது தூதனுடன் விசேஷமாய்ப் பேசச் சாத்தியப்படாமல் அவள் "சபர்" என்று சொன்னாள். (சிறிதுநேரம் இரு; வந்து சொல்லுகிறேன் என்பது அதன் கருத்து.) பூசையை முடித்துக்கொண்டுபோய்ப் பதில் எழுதிக்கொடுக்கலாம் என்று எண்ணி அவள் அப்படிச் சொன்னாள். தூதனோ அதன் கருத்தை அறிந்துகொள்ளமாட்டாமல் உடனே பட்டணத்துக்குத் திரும்பிப்போய் இளவரசி தனக்கு சபர் வேண்டுமென்று சொல்லுகிறாள் என்று செய்திசொன்னான். அதுகேட்டு அரசன், சபர்! சபர்! இதென்ன புதுப்பெயராயிருக்கிறதே; இதுவரையில் இதை நான் கேட்டதே இல்லையே. இருக்கட்டும். நான் என்னால இயன்றவளவு தேடிப்பார்த்து எங்கேயாவது சபர் அகப்பட்டால் அதை அவளுக்கு வாங்கி அனுப்புகிறேன் என்று சொல்லி, உடனே கப்பலேறித் தேசாந்தரத்துக்குப் போகப் புறப்பட்டான்.

சிலநாளைக்குள்ளேயே அவன் தான் கருதிய தேசம்போய்ச்

சேர்ந்து அவ்விடத்தில் தனக்கு ஆகவேண்டிய வேலைகளையெல்லாம் செய்து முடித்துக்கொண்டு தன் மூத்தபெண்கள் அறுவருக்கும் வேண்டிய ஆடையாபரணங்கள் யாவும் வாங்கிக்கொண்டு மீளவும் தன் நகரத்துக்குத் திரும்பும்படி கப்பலேறினான். அக் கப்பல் எத்தனை பாய்விரித்து ஓட்டப்பார்த்தும் கப்பல் துறையை விட்டு நகரவேயில்லை. கடைசிமகள் வேண்டியதைத் தேடி வாங்கிக்கொள்ள அவன் மறந்துபோனதினாலேயே அக்கப்பல் இருப்பிடம்விட்டு அசையவில்லை.

உடனே அவனுக்குத் தன் சிறியமகள் கேட்டது நினைவுவந்தது. தக்ஷணமே ஒரு சேவகன் கையில் நாலாயிரம் ரூபாய் கொடுத்து, நான் முக்கியமான காரியமொன்று மறந்துபோனேன். அதனாலேதான் இக்கப்பல் இருப்பிடம் விட்டு அசையவில்லையோ என்னவோ! இந்த ரூபாயைக் கையிலெடுத்துக்கொண்டு நீ துரிதமாய் இப்பட்டணத்துக்குப் போய்க் கடைத்தெருக்கள் தோறும் விசாரணைசெய்து "சபர்" என்ற பொருள் எங்கேயாவது அகப்படுமானால் என்னவிலையானாலும் கொடுத்து அதை வாங்கிவரவேண்டும் என்றான்.

அப்படியே அந்தச் சேவகன் அப்பட்டணத்துக் கடைத்தெருவுக்குப் போய் ஒவ்வொரு கடையாய் 'சபர் அகப்படுமா? சபர் அகப்படுமா?' என்று விசாரித்துக் கேட்டுக்கொண்டுபோனான். அது தங்களிடத்தில் இல்லவேயில்லை; அது என்னவஸ்துவோ அதுவே தங்களுக்குத் தெரியாது என்று எல்லோரும் சொல்லிவிட்டார்கள். கடைசியில் அவன், இனி இதற்குச் செய்யவேண்டுவதென்னவென்று யோசிக்கலானான். அப்போது சிலர் வந்து என்ன யோசிக்கிறாய் என்று கேட்க, எங்கள் யஜமானன் 'சபர்' வாங்கிக்கொண்டு வரும்படி சொன்னார்; கடைத்தெருவில் எங்கே விசாரித்தாலும் அது தங்களுக்குத் தெரியாதென்கிறார்கள். நீங்கள் அறிவீர்களா என்றான். நாங்களும் அதைக் கேள்விப்பட்டதில்லை; ஆனால் இத்தேசத்து ராஜகுமாரனுக்கு சபர் என்று பெயர், அவரிடம் போய் விசாரணைசெய்தால் தெரியவரும் என்றார்கள்.

அதைக் கேட்டுக்கொண்டு அச்சேவகன் அவ்விதமே இளவரசனிடம் போய், ஐயா, எமது தேசத்து ராஜகுமாரத்தி தனக்கு சபர் கொண்டுவரும்படி தன் தகப்பனாருடன் சொல்லியனுப்பினாள். அதற்காக அதைத் தேடி வாங்கிக்கொண்டுவரும்படி எங்கள் அரசன் என் கையில் 4000 ரூபாய் கொடுத்தனுப்பினார். எங்கே தேடிப் பார்த்தாலும் அது எனக்கு அகப்படவில்லை; யாரைக் கேட்டாலும் அதென்னவோ தங்களுக்குத் தெரியாதென்கிறார்கள். தாங்கள் எங்கேயாவது அழைப்பித்துக் கொடுப்பீர்களாவென்று கேட்டான். அதற்கு அவ்விளவரசன், அப்படியா, நல்லது, இந்தச் சிறு பெட்டியைக் கொண்டுபோய் உங்கள் அரசன்கையில் கொடுத்து,

விரும்பிய அவருடைய கடைசிமகளுக்குக் கொடுக்கும்படியாகவும் அவள்தவிர மற்றெவரும் இதைத் திறக்கக்கூடாதெனவும் சொல்லு; இந்த நாலாயிரம் ரூபாயையும் நான் கொடுத்த பரிசாக நீயே வைத்துக்கொள் என்று அனுப்பினான்.

அவனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அந்தச் சேவகன் கப்பலுக்குச் சென்று தன் யஜமானன் கையில் அந்தச் சிறு பெட்டியைக் கொடுத்து, இப்பெட்டிக்குள் சபர் இருக்கின்றதாம். சபரை விரும்பிய நமது இளவரசியல்லாமல் மற்றெவரும் இதைத் திறக்கக்கூடாதென்று இத்தேசத்து இளவரசர் உரைத்தார் என்றான். உடனே கப்பல் அவ்விடம் விட்டுக் கிளம்பிற்று. அவ்வரசனும் பத்திரமாய்த் தன் தேசம்போய்ச் சேர்ந்தான்.

பட்டணம் போய்ச் சேர்ந்தபிறகு அவ்வரசன் தான் வாங்கி வந்த ஆடையாபரணம் முதலிய அருமையான பொருள்களைத் தன் மூத்தபெண்கள் ஆறுபேருக்கும் கொடுத்து, கடைசிபெண்ணுக்கும் அவளுக்காக வாங்கிவந்த சிறுபெட்டியைக் கொடுத்தனுப்பினான். அப்பெண் அதை வாங்கிக்கொண்டு "ஆ, இது தந்தையா எனக்குக் கொடுத்தனுப்பினார்? நல்லது இருக்கட்டும், இதற்குள் இருப்பதைச் சாவகாசமாய்த் திறந்துபார்ப்போம்" என்று வைத்துவிட்டாள். பிறகு அது அவளுக்கு மறந்துபோயிற்று; ஒருமாதம்வரையில் அதன் நினைவு வரவேயில்லை. ஒருமாதம் கழித்தபிறகு ஒருநாள் அதை நினைத்துக்கொண்டு, ஓ! தந்தை அனுப்பிய பெட்டியைத் திறந்துபார்க்க மறந்துபோனேனே; அவர் என்ன அனுப்பியிருக்கிறாரோ பார்ப்போம் என்று அப்பெட்டியைத் திறந்தாள். அதனுள் அற்புதமான சிறிய விசிறி ஒன்று இருந்தது. அதுகண்டு அவள் மிகவும் மனமகிழ்ந்து, அதையெடுத்துத் தனக்கு வேண்டும்போது விசிறிக்கொண்டிருந்தாள். ஒருநாள் விசிறிக்கொள்ளும்போது அழகிய ராஜகுமாரன் ஒருவன் அவள் எதிரிலே வந்து தோன்றினான்.

அவனைப்பார்த்து மிகுந்த வியப்பும் களிப்பும் அடைந்தவளாய், நீங்கள் யார்? உங்கள் பெயர் என்ன? எங்கிருந்து வருகிறீர்கள் என்று வினவினாள். அதற்கு அவன், நானொரு ராஜகுமாரன், என் பெயர் சபரன். உன் தந்தை என் தந்தையின் நகரத்திற்கு வந்து, நீ சபரனைக் கொண்டுவரும்படியாகக் கேட்டதாய்ச் சொல்லி விசாரித்தார்; அதனால் நான் இச்சிறுவிசிறியை அவர் வசம் உனக்காகக் கொடுத்தனுப்பினேன். யார் இவ்விசிறியையெடுத்து இதன் மேற்புறம் வெளியேயிருக்கும்படியாகத் திருப்பி விசிறிக்கொள்கிறார்களோ, அவர்களுடைய சந்நிதானத்தில் நான் வந்து நிற்பேன். நான் மறைந்துபோகவேண்டுமென்றால் இவ்விசிறியின் மேற்புறம் உள்ளே வரும்படியாகத் திருப்பி விசிறிக்கொள்ளவேண்டும்

என்றான். அதுகேட்டு அவ்விளவரசி மிகவும் ஆநந்தமடைந்து, நீங்கள்தானா நான் தேடிய ராஜகுமாரன், நான் செய்த தவம் இன்றுதான் ஈடேறிற்று என்று சொல்லி அவனுக்குப் பலவிதமான உபசாரங்கள் செய்தாள். பிறகு அவ்விருவரும் சிறிதுநேரம் உல்லாஸமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். பேசிமுடிந்தபின்பு இளவரசன் நான் போய்வருகிறேன் என்று சொல்ல, அவள் தன் புதிய விசிரியையெடுத்து மேற்புறம் உள்ளாகும்படி திருப்பி விசிரிக்கொண்டாள்; உடனே அவன் மறைந்துபோயினான்.

சிலநாளுக்குப்பிறகு அவள் மறுபடியும் அவ்விளவரசனைப்பார்க்கக் கருதி, ஒருநாள் தன் விசிரியையெடுத்து மேற்புறம் வெளியேயிருக்கும்படி திருப்பி விசிரிக்கொண்டாள்; உடனே சபர ராஜன் அவள் எதிரில் தோன்றினான். மறுபடியும் அதைத் திருப்பி விசிரிக்கொண்டாள்; உடனே அவன் மறைந்துபோயினான். இப்படியே இரண்டொருதடவை நடந்துவந்தது. இவ்வண்ணமிருக்க ஒருநாள் அவ்விளவரசன் அவளிடம் வந்திருந்தபோது இளவரசியைப் பார்த்து, உன்னை மணம்புரிந்துகொள்ளவேண்டுமென நான் விருப்பம்கொள்ளுகிறேன், உன்னுடைய அபிப்பிராயம் எப்படி என்று கேட்டான். அது அவளுக்குக் கும்பிடப்போனதெய்வம் குறுக்கே வந்ததுபோலாயிற்று. உங்களுக்குச் சம்மதி இருக்குமாயின் நான் அடிமையாக நடக்கக் காத்திருக்கிறேன் என்று சொல்லி, அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யலானாள். "நான் சபராராஜனை மணம்புரிந்துகொள்ள நிச்சயித்திருக்கிறேன்; நீங்கள் ஸகுடும்பமாகவந்து, என் கலியாணத்தை நடப்பித்து என்னை ஆசீர்வதித்துப்போகவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்" என்று தன் தாய் தந்தையர்களுக்கும் சகோதரிகளுக்கும் கடிதம் அனுப்பினாள். உடனே அவர்கள் எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். அவ்விளவரசனைத் தன் மகள் மணம்புரிந்துகொள்வதற்காகத் தகப்பன் மிகவும் மகிழ்ச்சிகொண்டு மகளைப்பார்த்து, குழந்தாய், நான் ஏதோ தெரியாமையால் முன் நீ சொன்னபேச்சுகளைக் கேட்டுக் கோபித்து, உன் விஷயத்தில் பொல்லாங்குசெய்யலானேன். நீ சொன்னபடி உன்னை எப்போதும் கருணைக்கடலான கடவுளே கைவிடாமல் காத்து வருகிறார்; ஆதலின் உனக்கு என்றும் ஒரு குறையும் இல்லை என்று சொல்லி அவளைக் கட்டி அணைத்துக்கொண்டு உச்சிமோந்து ஆனந்தக்கண்ணீர் பெருக்கினான்.

பிறகு ஒரு நல்ல சுபமுகூர்த்தத்தில் விவாகம் நடப்பிக்க நிச்சயித்து அப்பட்டணமெங்கும் வெகு சிறப்பாக அலங்கரிக்கலானார்கள். குறித்தமுகூர்த்தத்தில் கலியாணம் வெகு விபவமாக நடந்தேறிற்று. அன்றிராத்திரி மணமகன் படுப்பதற்காகப் பள்ளியறை அலங்கரிக்க ஆரம்பித்தபோது, இவ்விளவரசியின் சகோதரிகள் அறுவரும்

இவளிடம் வந்து, எங்கள் செல்வத்தங்காய், உன் மணவாளனுக்குப் பள்ளியறை அலங்கரிக்கிற காரியம் எங்களுக்கு இருக்கட்டும்; அந்தக் காரியத்தை வேலைக்காரர்கள் செய்யவேண்டாம் என்று சொன்னார்கள். அதற்கு அச்சிறுமி, அவ்வருத்தம் உங்களுக்கு ஏன்? எந்த வேலையையும் செய்ய வேலைக்காரர்கள் கைகட்டிக் காத்திருக்கிறார்கள்; ஆயினும் ஆசையோடு நீங்கள் செய்யப் புகுந்தால் நான் அதைத் தடுக்கவில்லை; உங்கள் மனோரதப்படி நடத்துங்கள் என்றாள்.

அப்படியே அவளுடைய சகோதரிகள் ஆறுபேரும் படுக்கையறை அலங்கரிக்கப் புகுந்தார்கள். அலங்கரிக்கும்போது அவர்கள் வளையலோடுகளைப் பொடிப்பொடியாக நறுக்கி அப்பொடிகளை மணமகன் படுக்கும் மெத்தைமேல் பரப்பி அதன்மேல் அழகான பட்டுவஸ்திரத்தைப் பரப்பிவைத்தார்கள். மூத்தபெண்களான தாங்கள் மணம்புரிந்துகொள்ளாதிருக்க அவள்மாத்திரம் முன்னே விவாகம் செய்துகொள்ளுகிறாளென்ற கோபத்தாலும், அவளுக்குமாத்திரம் அத்தனை அழகான செல்வமணவாளன் வாய்த்தானேயென்ற பொறாமையாலும் அவ்விளவரசனைக் கொல்லும்படி அவர்கள் அவ்வுபாயம் செய்தார்கள்போலும். மேலும் தாங்கள் தகப்பனுக்கு அருமைப்பெண்களாகி அவரோடுகூடவே வசித்து அவரால் மிகவும் கொண்டாடப்பட்டிருப்பதாலும், இவள் அவரால் துரத்தப்பட்டு நடுக்காட்டில் வசித்துக்கொண்டிருப்பதாலும் தங்களுக்கில்லாத பெருமை அவளுக்குக் கூடாதென்பதும் அவர்களுடைய கருத்து.

கலியாணம் நடந்தேறியபின்பு அன்றிராத்திரி தம்பதிகள் இருவரும் பள்ளியறைக்குச் சென்றார்கள். பள்ளியில் படுத்தவுடனே மணமகன் அதன்மேலிருந்த வளையல் ஓடுகளெல்லாம் உடம்பு முழுதும் பொத்திக்கொள்ள அவனுக்குப் பொறுக்கக்கூடாத வேதனையுண்டாயிற்று. அதுதெரிந்து அவன் அப்புறம் ஒரு நிமிஷங் கூட அங்கே நிற்கக்கூடாதென்று தன் மனையாளை அழைத்துச் சீக்கிரமாய் என் விசிரியையெடுத்துத் திரிப்பி விசிரிக்கொள், எனக்கு உடம்பில் பொறுக்கக்கூடாத வேதனைகண்டிருக்கிறது; இனி இங்கிருப்பது உசிதமாய்த் தோன்றவில்லை; உடனே நான் என் தகப்பனாரிடம் போய்ச் சேரவேண்டும் என்றான். அப்படியே அவள் மாயவிசிரியையெடுத்துத் திருப்பி விசிரிக்கொண்டாள். உடனே விசிரிராஜன் தன் நகரம்போய்ச் சேர்ந்து தேகசவுக்கியந்தப்பி நெடுநாள் படுத்தபடுக்கையாய்க் கிடந்தான். காட்டுமாளிகை இளவரசிக்குத் தன் தமக்கைமார்களுடைய வஞ்சனையினால் இப்படித் தன் கணவனுக்குத் தீராத் துயரமுண்டாயிற்றென்ற செய்தி தெரியவே தெரியாது.

கலியாணமுடிந்தபிறகு அவளுடைய தாய்தந்தை முதலியவர்களெல்லாரும் கடைக்குட்டியான செல்வச்சிறுமியைமாத்திரம் தனியே விட்டுவிட்டுத் தம் ஊர்போய்ச்சேர்ந்தனர். பிறகு அவள் தன் கணவனை வரவழைக்கக் கருதி விசிறியையெடுத்து நோாகத் திருப்பி நாள்தோறும் பலதடவை விசிறிக்கொண்டாள். அதனால் அவள் கை ஓய்ந்துபோயிற்றேயன்றி அவன் வந்து சேரவில்லை. அவன் உடம்பெல்லாம் விரணமாகிப் படுக்கையைவிட்டு எழுந்திருக்கச் சக்தியற்றுக் கிடக்கிறானே; எப்படி எழுந்துவருவான்! இவ்வண்ணம் பலநாள் எதிர்பார்த்திருந்தும் அவன் வராமைகண்டு ஒரு நாள் இளவரசி மிக்க விசனமடைந்து, என் பிராணநாதன் ஏன் வரவில்லை; அவர் என்ன ஸ்திதியிலிருக்கிறாரோ! போய்ப் பார்த்து வருவோமென்றாலும் அவரிருக்குமிடம் இன்னதென்று தெரியவில்லையே! என்று சொல்லிப் பலவிதமாய்ப் புலம்பலானாள். அதனோடு கூட அன்றிராத்திரி அவள் படுத்துத் தூங்கும்போது, உடம்பு மிகவும் அனுகூலமில்லாமல் தன் கணவன் படுத்தபடுக்கையாய்க் கிடப்பதாகக் கனவுகண்டாள்.

காலையில் எழுந்தவுடனே அம்மகளுக்கு எவ்விதமாவது தான் அவரிருக்குமிடம் தேடிப்போய் அவனைப் பார்த்துவரவேண்டுமென்ற ஆவல் உண்டாயிற்று. அதன்மேல் அவள் தன் ஆட்சிகளையெல்லாம் ஒருவர் அதீனத்தில் ஒப்புவித்துவிட்டுத் தன்னுடைய உயர்ந்த ஆடையாபரணங்களையெல்லாம் கழற்றிவிட்டுக் காவித்துணிபோர்த்து ஆண்டிவேஷம் பூண்டு அதிவேகமான ஒரு குதிரைமேலேறிக்கொண்டு கணவனிருக்குமிடம் தேடப் புறப்பட்டாள். வெளியே போனபோது அவள் ராஜகுமாரத்தியென்று எவர்க்கும் தோன்றவில்லை; பெண்ணென்பதே தெரியவில்லை. பார்த்தவர்களெல்லாம் யாரோ அதிசூரனான ஒரு புருஷனென்றே நினைத்திருந்தார்கள். அப்படி அவள் போய்க்கொண்டிருக்கையில் ஒரு பெருங்காட்டிலே பொழுதுபோய்விட்டது. அதனால் அவள் அக்காட்டிலேயே ஒரு மாத்தடியில் இறங்கி, குதிரையை அம்மாத்திலே கட்டிவிட்டு அவ்விடத்திலேயே இராப்பொழுதைக் கழிக்கும்படி படுத்துக்கொண்டாள். படுத்துத் தூங்கும்போது நடுராத்திரியில் அம்மாத்தின்மேல் சில பறவைகள் வந்து உட்கார்ந்து அதனடியில் இவள் படுத்திருப்பதையறிந்து சந்தடிசெய்து அந்தந்த தேசங்களில் அவைகள் கண்ட விநோதங்களைப்பற்றிப் பேச ஆரம்பிக்க, அந்தக் கூச்சல்கேட்டு அவள் விழித்துக்கொண்டாள்.

அவளுக்குப் பறவைகளின் பேச்சையறியும் திறமையுண்டு. அங்கே வந்திருந்த பறவைகளுள் ஒன்றாகிய மைனா அல்லது நாகணவாய்ப்புள்ளானது மற்றொன்றான கிளியைப்பார்த்து, கிளியே

ஏதாவது ஒரு கதை சொல்லுகிறாயா என்று வினவ, கிளி சொல்லுகின்றது: "சபான் என்னும் ராஜகுமாரன் தன் தேசத்தில் உடம்பு அனுகூலமில்லாமல் மிகவும் அபாயமான நிலையிலிருக்கிறான். அவனுடைய கலியாணதினத்தில் மணமகளின் சகோதரிகள் ஆறு பேரும் சேர்ந்து பொறாமையினால் வளையல் ஓடுகளைப் பொடி செய்து அதை அவன் படுக்கப்போகிற பள்ளியில் தூவிவிட்டார்கள். படுத்துக்கொண்டவுடனே அந்தப் பொடிகள் அவன் உடம்பில் பொத்தி உள்ளே நரம்புவாயில் ஏறிப்போயின; அதனாலேதான் அவனுக்கு அவ்வளவு அசவுக்கியம் உண்டாயிற்று" என்று சொல்லிற்று. அதைக் கேட்டு நாகணவாய்ப்புள்ளானது, "ஆயின் அந்த நோய்க்கு மருந்தென்ன? இன்னும் எத்தனைநாள் அவன் இப்படி நோயில் அடிபட்டுக்கொண்டு கிடப்பான்? இவைகளை எனக்குத் தெளிவாய்ச் சொல்லவேண்டும்" என்று கேட்டது.

அதற்குக் கிளியானது, "எப்படிப்பட்ட வைத்தியனாயினும் அதை அனுகூலப்படுத்த முடியாது; எப்படிப்பட்ட மருந்து கொடுத்தாலும் அதற்குப் பயன்படாது. ஆயினும் ஒரு உபாயம் உண்டு: எவனாவது ஒருவன் இதன் நுட்பத்தைத் தெரிந்துகொண்டு ஒருநாளிராத்திரி இம்மாத்தடியில் படுத்திருந்து, இதனடியிலுள்ள மண்ணில் சிறிதளவு எடுத்துக்கொண்டுபோய் அதைக் குளிர்ந்த தண்ணீரில் கரைத்து அதை அவன் உடம்புமுழுதும் நன்றாய் இரண்டு மூன்றுதடவை பூசினால் உடனே அந்த நோய் சொஸ்தமாகிவிடும்" என்று சொல்லிற்று.

அம்மாத்தடியில் படுத்திருந்த இளவரசி அந்தப் பேச்சுகளையெல்லாம் கேட்டுக்கொண்டேயிருந்தாள். அவைகள் பேசிமுடிந்தவுடனே அவள் எழுந்து உட்காந்துகொண்டு எப்போ பொழுது விடியப்போகிறதென்று காத்திருந்தாள். விடியற்காலமானவுடனே அம்மாத்தடியிலுள்ள மண்ணில் சிறிது எடுத்துக்கொண்டு குதிரைமேலேறிப் பிரயாணமாயினாள். அங்கிருந்து புறப்பட்டு நடுவழியிலெங்கும் நிற்காமல் ஒரேநெட்டாய் சபாராஜனுடைய நாடு போய்ச்சேர்ந்து, இந்நாட்டு அரசனுடைய பெயரென்ன? என்று அங்குள்ளவர்களை விசாரித்தாள். அவர்கள் அதற்கு இந்நாட்டு அரசனுக்கு சபாராஜன் என்று பெயர் என்றார்கள். அதுகேட்டு அவள் அங்கே ஒரு அம்மையார் வீட்டில் இறங்கினாள். பின்பு அவ்வீட்டில் போசனம்செய்துகொண்டிருக்கும்போது, இப்பட்டணத்தில் ஏதாவது விசேஷமுண்டோ என்று அவ்வீட்டுக்காரியைக் கேட்க அவள், இப்பட்டணத்து இளவரசர் உடம்பு சொஸ்தமில்லாமலிருக்கிறார். அதற்காக நான் அநேகமாய் அரண்மனையிலேயே இருக்க வேண்டியிருக்கிறது. அதனால் எனக்கு ஒரு விசேஷமும் தெரியாது என்றாள். ஆயின் அவர்க்கு உடம்பு எப்படியிருக்கிறதென்று யோகி

வேஷம்தரித்த இளவரசி மறுபடியும் கேட்க, அவள், யார் எப்படிப் பட்ட மருந்துகொடுத்தாலும் குணப்படவில்லை; அது என்ன வியாதி யோ தெரியாது என்று சொன்னாள். அதற்கு யோகி, என்னிடத்தில் உயர்ந்த மருந்து ஒன்று இருக்கிறது. அரசனைக் கேட்டுக்கொண்டுவா. இஷ்டமானால் வந்து கொடுக்கிறேன் என்று சொல்ல, உடனே அவள் அரண்மனைக்கு ஓடி, என் வீட்டில் யோகி ஒருவர் வந்து இறங்கியிருக் கிறார். அவர் நம் இளவரசருடைய வியாதியை வெகு சீக்கிரத்தில் குணப்படுத்திவிடுவதாய்ச் சொல்லுகிறார் என்று அறிக்கைசெய் தாள். அதுகேட்டு அரசன், அப்படியானால் நீ அவரை ஏன் கூடவே அழைத்துக்கொண்டு வரவில்லையென்று சொல்ல, அவள் உடனே வீட்டுக்குப் போய் அந்த யோகியை அழைத்துக்கொண்டு வந்தாள். அரசனும் யோகிவேஷம்பூண்ட இளவரசிக்கு வேண் டிய உபசாரங்கள்செய்து ஆசனத்தில் உட்காருவித்து, பிறகு தன் மகனுடைய தேகஸ்திதி இப்படிப்பட்டதென்று எடுத்துச்சொல்லி, அதை நீங்கள் எப்படியாவது குணப்படுத்தவேண்டுமென்றான். யோகி அப்படியே ஆகட்டும், சுவாமி குணப்படுத்துவார் என்று சொல்லி, நோயினால் வருந்துகின்ற இளவரசனைப் போய்ப் பார்த்து விட்டு, நல்லது, நல்லதண்ணீர் கொஞ்சம் கொண்டுவாருங்கள் என்றாள். அவர்கள் கொண்டுவந்தவுடனே அந்தத் தண்ணீரில் தன் னிடமிருந்த மண்ணைப்போட்டுக் குழைத்து அதை அவன் உடம் பில் முழுதும் பூசச்சொன்னாள். அப்படியே இரண்டுமூன்று வேளை பூசினார்கள். பூசப்பூச அவன் உடம்பிலிருந்த புண்களெல்லாம் பொட்டாய் உதிர்ந்து தேகத்துக்கு நல்ல வலிவும் அழகும் உண்டா யின.

வியாதி சொஸ்தமானபின்பு அரசன் யோகியைப் பார்த்து, ஸ்வாமி, உங்கள் தயவினால் இவனுக்கிருந்த தீராதநோய் தீர்ந்து விட்டது. அதற்காக என்ன வெகுமதிகேட்டாலும் கொடுக்க நான் காத்திருக்கிறேன். வேண்டியதைக் கேளுங்கள் என்று கேட்டான். யோகி, எனக்கு மற்றொன்றும் வேண்டாம்; இளவரசன் தரித்துக் கொண்டிருக்கிற கணையாழியைக் கொடுத்தால் போதும்; உங்கள் பெயரைச் சொல்லிக்கொண்டு வெகுநாள் தரித்திருப்பேன் என, அப்படியே அரசன் அம்மோதிரத்தை அவளுக்கு வெகுமானமாகக் கொடுத்துவிட்டான். இன்னும் அற்புதமான விலைபெற்ற பொருள்க ளெல்லாமிருக்க, அற்பமான அந்த மோதிரத்தை யோகி வெகு மதியாகக் கேட்கும்போதே இதில் என்னவோ சூது இருக்கிற தென்று அவர்களுக்குத் தோன்றியது. ஆயினும் அவர்கள் அதை மறுக்கத் துணியவில்லை. பிறகு அந்த யோகி அரசனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அம்மையார் வீட்டுக்குப் போய்ப் போச னம் செய்துவிட்டுக் குதிரைமேலேறிக்கொண்டு தன் நகரம்போய்ச் சேர்ந்தாள். சேர்ந்தபிறகு யோகிவேஷத்தை வாங்கிவிட்டு வழக்

கப்படியே நன்றாய் அலங்கரித்துக்கொண்டு விசிரியை எடுத்து நேராகத் திருப்பி வலதுகையால் விசிரிக்கொண்டாள். விசிரின வுடனே சபரராஜன் எதிரேவந்து நின்றான். அவனைப்பார்த்து அவள், இதென்ன? இத்தனைநாள் நீங்கள் எங்கே போயிருந்தீர்கள். விசிரியையெடுத்து விசிரிவிசிரி என் கையும் ஓய்ந்துபோயிற்றே என்று கேட்க, சபரன், இத்தனைநாள் நான் உடம்பு அனுகூலமில்லாமல் படுத்திருந்தேன். இல்லாவிட்டால் இங்கே வராதிருப்பேனா? இப்போதான் யாரோ ஒரு யோகிவந்து அனுகூலப்படுத்தினார் என்று சொன்னான். அந்தப் பேச்சை அவள் நம்பாதவள் போல, நீங்கள் என்னவோ இப்போது முன்போலிருக்கவில்லை. உங்கள் மனம் வேறுபட்டிருக்கின்றது என்று சொல்லிச் சிறிது முகம் சுளித்தவளாய், அவன் கையைத் தடவிப்பார்த்துக் கையிலிருந்த கணையாழி எங்கேயென்றாள். வைத்தியஞ்செய்த யோகிக்குக் கொடுத்துவிட்டேனென்று அவன் சொல்ல, அவள் எல்லாம் இப்போது வெளிப்படையாய்த் தெரிந்துவிட்டது. உங்கள் இஷ்டப்படியே நடக்கலாம் என்று கோபித்தவள்போலிருந்தாள். அதைப் பொறுக்கமாட்டாமல் ராஜகுமாரன் அவளைக் கைபிடித்து வேண்டிக் கொள்ள, அப்போது அவள் கையில் தன்னுடைய மோதிரம் இருப்பதைப் பார்த்து வியப்படைந்து, இதென்ன? இம்மோதிரம் உன் கையில் எப்படி வந்துசேர்ந்தது என்று கேட்டான். அதன்மேல் அவள் புன்னகைகொண்டு, நானல்லவோ வந்து உங்களுக்கு வைத்தியம் செய்தது? யாரோ யோகியென்கிறீர்களே! என்று உண்மையை வெளிப்படுத்தி, தான் நெடுநாள் அவன் வரவையெதிர் பார்த்திருந்ததும், எத்தனைநாளாகியும் வராமற்போகவே தானே தேடிக்கொண்டு புறப்பட்டதும், போகும்போது நடுவழியில் இராத்திரியிலே பறவைகள் வந்து பேசிக்கொண்டதும், அதுகேட்டுத் தான் அவைகள் சொன்னவிதமாகவே வைத்தியஞ்செய்து வியாதியைப் போக்கினதும், கடைசியாய் அதற்கு வெகுமதியாக அந்த மோதிரத்தைத் தான் வேண்டுமென்றே வாங்கிக்கொண்டு வந்ததுமாகிய செய்திகளையெல்லாம் விவரமாய் எடுத்துக்கூறினாள். அதுகேட்டு அவன், பர்த்தாவினிடத்தில் அவளுக்கு இருக்கின்ற அபிமானத்தையும், அவனைக் காப்பாற்றுவதற்காக அவள் செய்த ஸாகஸச் செயல்களையும் பார்த்து மிகவும் மனமுவந்து, இப்படிப்பட்ட நற்குண நற்செய்கையுள்ள உன்னை இல்லாளாகக்கொண்ட என்னுடைய பாக்கியமே பாக்கியமென்று கொண்டாடினான். பிறகு அவர்கள் இருவரும் எல்லாச் செல்வமும் பொருந்தி ஒரு குறையுமின்றி நெடுநாள் சுகமாயிருந்தார்கள்.

———»»«« ———

சமாசாரம்.

இருப்புப்பாதை வண்டிக்கொள்ளை. — அமெரிக்காவில் இருப்புப் பாதை வண்டித்தொடர் ஒன்று ஓடிக்கொண்டிருக்கும்போது சில கள்ளர்கள் அதை எதிர்த்தனர். எவ்வாறெனின், ஓரிடத்தில் வண்டித்தொடர் நிற்கும்போது அக்கள்ளர்கள் நீராவியந்திரத்தின்மேலேறி வண்டியோட்டுகின்றவனைக் கொன்று தீயெரிக்கின்றவனை அடித்துக் குற்றுயிராக்கிவிட்டார்கள். அந்த வண்டியிலிருந்த பொக்கிஷப்பெட்டியைக் கொள்ளையடிக்க வேண்டுமென்பது அவர்களுடைய நோக்கமென்று தெரியவந்தது; ஆயினும் பிரயாணிகளெல்லாம் கும்பலாய்க் கூடிவந்ததுகண்டு அவர்கள் ஓடிப்போனார்களாம்.

எண்ணெய்க் கிணறு.—பஞ்சாப் அல்லது பாஞ்சாலதேசத்தில் ராவல் பிண்டி நகரத்தைச் சுற்றிக் கிழக்குமேற்கு 102 மைல் நீளமும் தெற்கு வடக்கு 83 அடி அகலமுமுள்ள விசாலமான பூமியானது சில வருஷகாலமாய் எண்ணெய் அகப்படுகின்ற பூமியாயிருக்கின்றது. அமெரிக்காவில் எண்ணெய் அகப்படுகின்ற பூமியைவிட இப்பூமி விசாலமானதென்கிறார்கள்.

கோனாய்கள் செய்யும் தீமை. — ஆக்ராவுக்கு அடுத்தவிடங்களில் கோனாய்கள் மிகக்கொடிய பொல்லாங்குகள் செய்துவருகின்றன. நான்கு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளையே எழுபது குழந்தைகள்வரையில் சென்றவருஷத்தில் தூக்கிக்கொண்டு போயினவாம். யமுனாநதியை அடுத்த விடங்களில் அவை நிர்ப்பயமாய்த் திரிந்துகொண்டிருக்கின்றன. ஆதலால் சீக்கிரமே அந்தப் பொல்லாத மிருகங்களை வேட்டையாடி நிர்மூலமாக்கும்படியாக நேரிடுமெனத் தோன்றுகின்றது என்று பத்திராதிபர் ஒருவர் சொல்லுகிறார்.

குடை.—சென்ற பன்னிரண்டுமாதத்திற்குள் வெளித்தேசங்களிலிருந்து இவ்விந்தியாவுக்கு 33,53,055 குடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டனவாம்.

ஸம்ஸ்கிருதபாஷையில் விசேஷபண்டிதரென மிகப் பிரசித்திபெற்ற மானியர் வில்லியம்ஸ் துரையவர்களை ராஜப்பிரதிநிதியவர்கள் இவ்விந்தியாவுக்கு வரும்படி செய்தியனுப்பியிருக்கிறாராம். இந்தக் கோடைகாலம் கழிந்தவுடன் அவர் கல்கத்தாவுக்கு வருவதாய்த் தெரியவருகிறது.

இங்கிலாந்தில் வருஷவாரி அரைத்துணி பற்றிக்கொண்டு உடம்பு வெந்து இறந்துபோகிற சிறுவர்களின் தொகை ஏறக்குறைய 3000 வரையில் ஆகின்றதெனக் கணக்கிட்டிருக்கிறார்கள்; ஆதலின் குழந்தைகளைக் காப்பாற்றுகிறவர்கள் இவ்விஷயத்தை எப்போதும் மறவாமல் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு வெகு கருத்தாய்ப் பார்த்துவரக்கடவர்கள்.

C. K. S. Press, Vepery, Madras. 1884.

220-A



YELLOWSTONE LAKE.—பொன்னிறக்கல் தடாகம்.